வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 04.12.2021 சனிக்கிழமை | இதழ் : 364 | பக்கங்கள் : 16




# வாக்கெடுப்பை நிராகரித்த சபாநாயகர் கூட்டமைப்பு, முன்னணி வெளிநடப்பு!

## பாதுகாப்பு அமைச்சு நிதி ஒதுக்கீட்டில் கடும் வாக்குவாதம்

கொழும்பு, டிசெம்பர் 04

பாதுகாப்பு அமைச்சு,பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு மீதான நிதி ஒதுக்கீடுகள் மீது தமிழ் தேசிய மக்கள் முன்னணி வாக்கெடுப்பு கோரியும் அதனை சபாநாயகர் மற்றும் ஆளும் கட்சியினர் நிராகரித்ததால் ஆளும் தரப்புக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் சபையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டதையடுத்து தாம் வெளிநடப்பு செய்வதாகக் கூறி இரு கட்சி எம்.பிக்களும் சபையிலிருந்து வெளியேறினர். 15

## பூஸ்டர் தடுப்பூசி பெறுவதில் வடக்கு மக்கள் ஆர்வமில்லை

யாழ்ப்பாணம், டிசெ. 04

நோயெதிர்ப்பு சக்தி குறைந்தவர்களுக்கும் அதிக ஆபத்துள்ள நோய் நிலைமையுடைய 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் மற்றும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குமான மூன்றாவது தடவை தடுப்பூசி வழங்கல் பணி வடக்கு மாகாணத்தில் முன்னெ 15

# நாடு முழுவதும் நேற்று திடீரென மின்சாரம் தடை

## மின் பொறியியலாளர் சங்கத்தின் நாசகார வேலை எனச் சந்தேகம்

கொழும்பு, டிசெம்பர் 04

நாடு முழுவதும் நேற்று முற்பகல் 11.30 மணி முதல் 6 மணிநேரம் மின் விநியோகம் திடீரெனத் தடைப்பட்டது. 15

### நாடு முழுவதும் சுழற்சிமுறையில் ஒன்றரை மணிநேரம் மின்வெட்டு!

கொழும்பு, டிசெ. 04

நாடு முழுவதும் பொதுமக்கள் அடுத்த சில நாள்களுக்கு ஒன்றரை மணிநேர மின்வெட் 15

### மின்சார தடைக்கு காரணம் என்ன? விசாரணையை ஆரம்பித்த சி.ஐ.டி.

கொழும்பு, டிசெ. 04

நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட மின் விநியோகத் தடை தொடர்பில் குற்றப்புலனாய்வுப் 15

*மின் தடை ஓர் உயிரை பறித்தது:*

## ரயில் 'பட்டா'வை மோதியதில் கொடிகாமத்தில் ஒருவர் பலி!

தென்மராட்சி, டிசெ. 04

கொடிகாமத்தில் பட்டா ரக வாகனத்தை ரயில் மோதித் தள்ளியதில் ஒருவர் உயிரிழந்தார்.

நாடு முழுவதும் நேற்று மின் தடை ஏற்பட்டி 15

## 11 மாணவர் கடத்தல் விவகாரத்தில் கரன்னாகொட மீது நடவடிக்கை

*சரத் பொன்சேகா மன்றத்தில் பேச்சு*

கொழும்பு. டிசெ. 04

தமது அரசாங்கம் அமைக்கப்பட்டதும் 11 மாணவர்கள் கடத்தல் விவகாரத்தில் முன்னாள் கடற்படைத் தளபதி கரன்னாகொடவுக்கு எதிராக நடவடிக்கை எடுப்போம் என்று முன்னாள் இராணுவத் தளபதியான பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்சல் சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பாதுகாப்பு அமைச்சு, பொதுமக்கள் 15

## டெங்கு கட்டுப்பாட்டு வாரம் யாழ்ப்பாணத்தில் பிரகடனம்

*அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கி செயற்பாடுகளை முன்னெடுக்க தீர்மானம்*

யாழ்ப்பாணம், டிசெ. 04

யாழ். மாவட்டத்தில், டெங்கு தொற்று தீவிரமடைவதை கட்டுப்படுத்தும் நோக்குடன் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 6ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நுளம்புக் கட்டுப்பாட்டு வாரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள் 15

## வடக்கில் கரையொதுங்கிய சடலங்கள் யாருடையவை?

*காரணம் என்ன என சபையில் சிறிதரன் கேள்வி*

கொழும்பு, டிசெ. 04

வடக்கின் கடற்கரையோரங்களில் கரையொதுங்கியுள்ள 6 சடலங்களுக்குரிய ஆண்கள் யார் என்பதனை இன்டர்போல் வரை பிரபலமான இலங்கை பொலிஸாரால் இதுவரையில் ஏன் இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை? சடலங்கள் கரையொ 15




உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# பெரும் பொருள் தட்டுப்பாட்டுக்கு முகம்கொடுக்க போகின்றது நாடு

## எச்சரிக்கிறார் அநுரகுமார

கொழும்பு, டிசெ. 04

நாட்டில் பெருமளவில் பொருட்கள் தட்டுப்பாடு ஏற்படப்போவதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற பாராளுமன்ற அமர்விலேயே அவர் இதனை கூறியுள்ளார்.

வெளிநாட்டு கையிருப்பு நெருக்கடி காரணமாக அத்தியாவசிய பொருட்கள் உள்ளடங்கிய ஆயிரத்துக்கும் அதிகமான கொள்கலன்கள் விடுவிக்கப்படாது தடுத்து வைக்கப்பட்டுள்ளன என அவர் சுட்டிக்காட்டினார். இதனை விடுவிக்க இறக்குமதியாளர்களுக்கு வங்கிகளில் டொலர்களை விடுவிக்க முடியாத நிலையொன்று ஏற்பட்டுள்ளதாகவும் அநுரகுமார குறிப்பிட்டார்.

# வேலணை சபையின் பட்ஜெட் நிறைவேற்றம்

யாழ்ப்பாணம், டிசெ. 04

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் ஆளுகைக்குட்பட்ட யாழ். வேலணை பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் தவிசாளரின் மேலதிக ஒரு வாக்கால் நேற்று நிறைவேற்றப்பட்டது.

வேலணை பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டத்துக்கான விசேட கூட்டம் நேற்று சபையின் தவிசாளர் ந.கருணாகரகுருமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் 6 உறுப்பினர்கள், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் 2 உறுப்பினர்கள், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலா ஒரு உறுப்பினர் என 10 உறுப்பினர்கள் வரவு - செலவுத் திட் டத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 8 உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலா ஒரு உறுப்பினர் என 10 உறுப்பினர்கள் வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களித்தனர்.

பின்னர் சபையின் தவிசாளர் மேலதிகமாக ஒரு வாக்கைச் செலுத்த முடியும் எனும் உள்ளூராட்சி சபை சட்டத்துக்கு அமைவாக தவிசார் தனது வாக்கை ஆதரவாகச் செலுத் தியதன் மூலம் வரவு - செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. (இ)

# இலங்கை வரும் சகல பயணிகளுக்கும் பி.சி.ஆர். சோதனை செய்யத் திட்டம்

கொழும்பு, டிசெ. 04

வெளிநாடுகளில் இருந்து வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு மீண்டும் பி.சி.ஆர் பரிசோதனை செய்யப்படவேண் டும் என இலங்கை மருத்துவ சபை முன்மொழிந்துள்ளது.

இலங்கை மருத்துவ சபையின் தலைவரான வைத்தியர் பத்மா குணரத்ன குறிப்பிடுகையில்-

புதிய கொரோனா ஒமைக்ரோன் பரவல் காரணமாக மீண்டும் பி.சி.ஆர் பரிசோதனைகளை மேற்கொள்வது அவசியம்.

இலங்கைக்கு வருகை தரும் அனைத்து சுற்றுலாப் பயணிகளுக்கும் இது நடைமுறைப் படுத்தப்படும்.

பி.சி.ஆர் பரிசோதனையின் முக்கியத்துவம் கருதி கோவிட் - 19 தொடர்பான விசேட நிபுணர்கள் குழு பரிசோதனைகளை ஆரம்பிக்க வேண்டும்-என்றார்.

# யாவர்க்கும் நலம் கருத்தமர்வு இன்று

யாழ்ப்பாணம், டிசெ. 04

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகு நடத்தும் 'யாவர்க்கும் நலம்' மெய்நிகர் வழி கருத்தமர்வு 'பால்வினை நோய்களும் அதற்கான தீர்வுகளும்' எனும் தலைப்பில் இடம்பெறவுள்ளது.

டிசெம்பர் 01 உலக எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் இந்தக் கருத்தமர்வில் அனைவரும் பங்கேற்று பயன்பெற முடியும்.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகு பிரதி சனிக்கிழமை தோறும் யாவர்க்கும் நலம் கருத்தமர்வை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தக் கருத்தமர்வில் சூம் செயலி மூலம் 899 8528 2023 என்ற அடையாள எண் மூலம் 354485 என்ற கடவுச் சொலைப் பயன்படுத்தி இணைந்து கொள்ள முடியும். (ஐ)

# முதலீட்டு சபை உறுப்பினர்கள் பலர் கூட்டாகப் பதவி விலகல்

கொழும்பு, டிசெ. 04

இலங்கையில் முதலீட்டுள சபையின் இயக்குநர் சபை முக்கிய உறுப்பினர்கள் பலர் பதவி விலகியுள்ளனர்.

சபையின் தலைவர் உட்பட முக்கிய உறுப்பினர்கள் பலர் பதவி விலகியதை அடுத்து பணிப்பாளர் நாயகம் பசன் வணிகசேகரவும் பதவி விலகியுள்ளார் என தெரியவருகின்றது.

பதவி விலகியமைக்கான தெளிவான காரணங்கள் ஏதும் குறிப்பிடப்படவில்லை.

கடந்த காலங்களில் இலங்கை முதலீட்டுச் சபைக்கு உயர் சம்பளத்துடன் 29 பேர் நியமிக்கப்பட இருந்தனர்.

புதிய முதலீடுகளை கவர்வதற்கு புதிய திறமை வாய்ந்தவர்கள் அவசியம் என்பதனாலேயே புதியவர்களை நியமிப்பதற்கு முதலீட்டுச் சபை தீர் மானித்திருந்தது.

ஆனால் அதனை இரத்து செய்வது என அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதனை கடுமையாக எதிர்த்த இலங்கை முதலீட்டுச் சபை உறுப்பினர்கள் இப்பதவி விலகலை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)


# பாடசாலை விடுமுறையில் மாற்றம்

கொழும்பு, டிசெ. 04

அனைத்து அரச பாடசாலைகளும் எதிர்வரும் டிசெம்பர் 23ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் 2022 ஜனவரி 2ஆம் திகதிவரை விடுமுறை வழங்கப்படும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

முன்னர் டிசெம்பர் 23ஆம் திகதி தொடக்கம் டிசெம்பர் 27ஆம் திகதிவரை விடுமுறை வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் அரச பாடசாலைகள் 2022 ஜனவரி 3ஆம் திகதி மீள ஆரம்பிக்கப்படும்என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)



# அமெரிக்காவில் கடமையை பொறுப்பேற்றார் சமரசிங்க

நியூயோர்க், டிசெ. 04

அமெரிக்கா, மெக்சிக்கோ ஆகிய நாடுகளுக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த சமரசிங்க நேற்று முன்தினம் கடமைகளைப் பொறுப்பேற்றார்.

தூதுவராக இருந்த ரவிநாத ஆரியசிங்க ஓய்வு பெற்றதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் மஹிந்த சமரசிங்க நியமிக்கப்பட்டார்.

தூதுவர் பதவிக்கான கடமைகளை பொறுப்பேற்பதற்காக மஹிந்த சமரசிங்க கடந்த வாரம் பாராளுமன்ற உறுப்புரிமையை இராஜினாமா செய்தமை குறிப்பிடத்தக்கது.

## கல்வி tv CHANNEL-1

04.12.2021
சனிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | சித்திரம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் சிங்களம் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறு ஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு அனைத்துப் பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

## கல்வி tv CHANNEL - 2

04.12.2021
சனிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | அழகியல் |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | கதை |
| 09.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 10.30 | தரம்-03 | சைவசமயம் |
| 11.15 | தரம்-04 | Computer |
| 12.30 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-05 | Computer |
| 02.00 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | அழகியல் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | கதை |
| 06.00 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 06.45 | தரம்-03 | சைவசமயம் |
| 07.30 | தரம்-04 | Computer |
| 08.15 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 09.00 | தரம்-05 | Computer |
| 09.45 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 12.30 | தரம்-03 | சைவசமயம் |
| 01.15 | தரம்-04 | Computer |
| 02.00 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 02.45 | தரம்-05 | Computer |
| 03.30 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
04.12.2021 சனிக்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 18

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

## தென்னிலங்கையின் 2015 நிலைமை?

அரசாங்கம் மக்களை ஏமாற்றிவருவதாக எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்திருக்கின்றார். சஜித் அவ்வப்போது அரசாங்கம் தொடர்பில் அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றார். ஆனால், அறிக்கைகளுக்கு அப்பால் எதிரணியினரால் பெரிதாக எதையும் செய்ய முடிந்ததாகத் தெரியவில்லை. நெருக்கடிக்குள் சிக்குண்டிருக்கும் ஒரு நாட்டின் எதிரணியிடம் இருக்க வேண்டிய வீரியமான தலைமைத்துத்தை காண முடியவில்லை. இதற்கு என்ன காரணம்? எதிரணி சிதறிக்கிடக்கின்றது. சஜித் பிரேமதாஸ ஒருபுறமும், ரணில் விக்கிரமசிங்க ஒருபுறமும், கருஜெயசூரிய ஒருபுறமும், சம்பிக்க ரணவக்க ஒருபுறம் - என, எதிரணி தங்களுக்குள் ஒரு நிகழ்ச்சி நிரலுக்குள் ஒன்றுபட முடியாதவர்களாக இருக்கின்றனர். ரணில் விக்கிரமசிங்க கட்சி ரீதியில் பலவீனமாக இருந்தாலும் கூட, ரணில்மீதான சர்வதேச கவர்ச்சி முற்றிலுமாக நூர்ந்து போய்விடவில்லை. இதற்கு ரணிலின் அரசியல் அனுபவமும் அவருக்கிருந்த சர்வதேச அங்கீகாரமும்தான் காரணம்.

மக்கள் செல்வாக்குள்ள பிரதான எதிரணியாக சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியே இருக்கின்றது. ஆனால், பலவீனமானதோர் எதரணியாகவே இருக்கின்றது. 2015 இலும் இவ்வாறானதொரு நிலைமையே காணப்பட்டது. அப்போதும் ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி பலவீனமானதோர் எதிரணியாகவே இருந்தது. சிதறிக்கிடந்த சிறு கட்சிகள் - அவற்றுடன் தமிழ் முஸ்லிம் கட்சியினரும் அணிசேர்ந்த போதுதான், பலமானதோர் எதிரணி உருவெடுத்தது. தென்னிலங்கை இப்போதும் அப்படியானதோர் அரசியல் முகத்துடன்தான் இருக்கின்றது. முன்னர் மஹிந்த ராஜபக்ஷ இருந்த இடத்தில், இப்போது கோட்டாபய ராஜபக்ஷ இருக்கின்றார். முன்னர் ரணில் விக்கிரமசிங்க இருந்த இடத்தில் - சஜித் பிரேமதாஸ இருக்கின்றார். இதிலுள்ள மிகவும் சுவாரஸ்யமான விடயம் ஒன்றும் உண்டு. அதாவது, சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன - இப்போதும் பழைய இடத்திலேயே இருக்கின்றார்.

அதாவது, மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருக்கின்றபோது - எவ்வாறு, அதிருப்தியுடன் இருந்தாரோ - அவ்வப்போது அவமானங்களை சந்தித்துக் கொண்டிருந்தாரோ - அவ்வாறானதொரு நிலையில்தான் இப்போதும் இருக்கின்றார். மைத்திரிபால சிறிசேனவை மொட்டு அணியினர் தொடர்ந்தும் சீண்டி வருகின்றனர். நாங்கள் இல்லையென்றால் உங்களுக்கு மூன்றில் இரண்டு இல்லையென்று மைத்திரிபால எச்சரித்த பின்னரும்கூட, மொட்டு அணியினர் அவரை விடுவதாய் இல்லை. விருப்பம் இல்லாவிட்டால் வெளியேறுங்கள் - என்று ஏளனமான பதில்களே அவருக்குக் கொடுக்கப்படுகின்றது. மைத்திரியால் வெளியேற முடியாதென்பதை தெரிந்து கொண்டே இவ்வாறான சீண்டுதல்களை மொட்டு அணியினர் மேற்கொள்கின்றனர். தமிழ் அரசு கட்சியினர் பங்காளிக் கட்சிகளை ஏளனமாகப் பார்ப்பது போல்! ஒரு சரியான சந்தர்ப்பம் கிடைத்தால், மைத்திரி மீண்டும் ஒரு கூட்டணியுடன் சேருவதற்கான நிலைமையே தெரிகின்றது. முன்னரும் இதுதான் நடந்தது. ஆனால், அவ்வாறானதொரு பலமான கூட்டணியை ஏற்படுத்தவல்ல எதிரணி இன்னும் தென்படவில்லை என்பதுதான் பிரச்னை.

அரசாங்கத்தின் செல்வாக்கு பெருமளவுக்கு வீழ்ச்சியுற்றிருக்கின்றது என்பது எந்தளவுக்கு உண்மையோ - அந்தளவுக்கு, அரசாங்கத்தின் பலவீனங்களை மக்கள் மயப்படுத்தக்கூடிய பலமான நிலையில் எதிர்தரப்புக்களும் இல்லையென்பதும் உண்மையாகும். இந்த நிலைமைதான் மறுபுறத்தில், அரசாங்கத்திற்கு சாதகமாகவும் இருக்கின்றது. ஆனால், தென்னிலங்கையின் அரசியல் மீளவும் பழைய நிலைக்குள் சிக்கியிருப்பதுதான், இதிலுள்ள சுவாரஸ்யமான அரசியல் சங்கதி. இது ஒரு தொடர் கதையாகவே இருக்கப் போகின்றதா என்பதுதான் அடுத்த கேள்வி. ஏனெனில் ராஜபக்ஷக்களுக்கு போர் வெற்றியானது, ஒரு பலமான அரசியல் முதலீடாகவே இருகின்றது. சிங்கள மக்களை பாதுகாக்கக் கூடியவர்கள் அவர்கள்தான் என்னும் புரிதல் - மத்தியதர, அடித்தள சிங்கள மக்கள் மத்தியில் காணப்படுகின்றது. இந்த புரிதல்தான் மறுபுறத்தில் ராஜபக்ஷக்கள் பெரும்பான்மையான சிங்கள மக்களை கவர்வதற்கான அடிப்படையான காரணமாகவும் இருக்கின்றது.

இந்த சாதாரண சிங்கள புரிதலை எதிரணியினரால் கேள்விக்கு உள்ளாக்க முடிந்தால் மட்டும்தான், ஒரு தனிக்கட்சி தென்னிலங்கையின் அதிகாரத்தை கைப்பற்ற முடியும். அதுவரைக்கும் எதிரணியினருக்கு முன்னாலுள்ள ஒரேயொரு தெரிவு - ஒரு பலமான கூட்டணியை உருவாக்கிக் கொள்வது மட்டும்தான். 2015 இல் செய்தது போல்.

# சீன மாணவரின் கனவுக்கு சிறகான தமிழ்



பல்கலைக்கழகத்தில் சேர்வதற்கு முன்புவரை பெரும்பாலான சீனர்களைப் போலவே, நானும் தமிழ் பற்றிக் கேள்விப்பட்டதுகூட இல்லை. இனிமையான தமிழ் மொழியைக் கற்றுக்கொண்டதன் மூலம், நீண்ட வரலாறும், வளமான பாரம்பரியமும் கொண்ட தமிழ்க் கலாசாரம் ஒரு அழகான படம் போல என் மனத்தில் பதியத் தொடங்கியது. அந்த மொழியிலும் மொழி சார்ந்த பண்பாட்டிலும் மயங்காதவர்கள் யாரும் இல்லை என்னும்போது, நான் மட்டும் விதிவிலக்கா என்ன?

திருக்குறளை வாசிக்கும்போது பழந்தமிழ் புலவர்களுடன் பேசினேன். சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் பெண் சக்தி கண்டு உருகினேன். கல்வித் திட்டம் வழியாகத் தமிழ்நாட்டின் ஈர்ப்பு மிக்க வளமான சுற்றுலா மற்றும் கலாசாரங்களைக் கற்றுக் கொண்டேன். இதில் ஆச்சரியமான விசயம் என்னவெனில், சீனாவின் தென்கிழக்குக் கடற்கரையில் நான் மேற்கொண்ட ஆய்வில், 1000 ஆண்டுகளுக்கு முன்பு சீனாவிற்கு வணிகத்திற்காக வந்த தமிழர்கள் விட்டுச்சென்ற கல்வெட்டுகளைத் தனிப்பட்ட முறையில் பார்த்து ரசித்தேன்.

சீனாவிற்கும் தென்னிந்தியாவிற்கும் இடையிலான அற்புதமான, தொட்டுணரக் கூடிய கலாசாரப் பரிமாற்றத்தின் கதை சீனாவில் கிட்டத்தட்ட அறியப்படவில்லை. தென்னிந்தியக் கைவினைஞர்கள் ஏன் கடல் கடந்து சீனாவுக்குப் பயணம் செய்தனர்? அவர்களுடன் யார் யார் பயணித்தார்கள்? அவர்கள் எங்கே நிலைகொண்டார்கள்? அண்டை நாட்டுக்காரர்களான சீனர்களும் அவர்களும் எவ்வாறு பழகினார்கள்? சீனாவில் இருக்கும் தமிழ்க் கல்வெட்டுகளை யார் உருவாக்கினார்கள்? இவை போன்ற பல கேள்விகள் எனக்குள் எழுவது உண்டு.


சீனாவில் உள்ள தமிழ்க் கல்வெட்டு எழுத்துகளை உற்றுப் பார்க்கும்போது அதன் மீதான ஆர்வம் பெரிதும் தூண்டப்பட்டது. அதன்பின்பு அந்தக் கல்வெட்டு எனது எதிர்கால ஆராய்ச்சி திசைக்கு மிகுந்த உந்து சக்தியாக மாறியது. அப்போது முதல் நான் ஒரு கதைசொல்லியாக இருக்க விரும்பினேன். சீன -தென்னிந்தியப் பரிமாற்றங்கள் குறித்த வரலாற்றைப் பொதுமக்களுக்கு வழங்கச் சொந்த முயற்சிகளை மேற்கொள்ள விரும்புகிறேன்.

தென்னிந்தியாவின் வரலாறும் கலாசாரமும் பற்றிய ஆய்வு சீனாவில் கிட்டத்தட்ட உழப்படாத நிலம் போன்று தொடப்படாத புள்ளியாகும். தமிழ் மொழி, கலாச்சாரம் ஆகியவற்றின் மீதான எனது ஆர்வத்தின் காரணமாக, சீனாவின் மிகச் சிறந்த பல்கலைக்கழகமான சிங்ஹூவா பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத் துறையில் தொடர்ந்து படிப்பதற்கான வாய்ப்பை வெற்றிகரமாகப் பெற்றேன். எனது அரிய தமிழ் மொழி கற்றல் அனுபவம், நான் வராலற்றுத் துறையில் சேர்வதற்கான மிகப்பெரிய அனுகூலமாக இருந்தது. தற்போது சீனாவில் தமிழ் குறித்த ஆராய்ச்சியானது வேரோடத் தொடங்கி நல்ல தொடக்க நிலையை அடைந்துள்ளது.

இருநாட்டிற்கும் இடையே தவறான புரிதல்களும் சச்சரவுகளும் இருக்கின்றன என்றாலும், அவற்றையெல்லாம் தாண்டி, நான் கற்றுக்கொண்டதைப் பயன்படுத்தி ஒரு நல்ல கதைசொல்லியாகச் சீனாவுக்கும் தமிழகத்துக்கும் இடையிலான நட்பார்ந்த பரிமாற்றங்களுக்குப் பங்களிப்புகளைச் செய்ய முடியும் என உறுதியாக நம்புகின்றேன். “ஒரு மனிதன் புரிந்துகொள்ளும் மொழியில் பேசினால் அது அவன் மூளையைச் சென்றடையும். அதுவே, அவன் தாய்மொழியில் பேசினால் அது, அவன் இதயத்தைச் சென்றடையும்” என்றார் நெல்சன் மண்டேலா. எனது மூன்றாண்டு கால தமிழ் கற்றல் வாழ்க்கையைத் திரும்பிப் பார்க்கும்போது, நான் அதை முழுமையாக உணர்கின்றேன்.

**சாங் லின்** (Zhang Lin)
பீஜிங் அயல்மொழி ஆராய்ச்சிப் பல்கலைக்கழகம்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



டிசெம்பர் - 04 சனிக்கிழமை
பிலவ வருடம் - கார்த்திகை - 18
நல்ல நேரம் : 7.30 - 9.00
ராகு காலம் : 9.00 - 10.30
திதி : திதித்துவயம்




**மேடம்**
எந்த வம்பிலும் ஈடுபடாமல் இருந்தால் அருமையான நாள். ஒவ்வொரு செயலையும் கவனமாகச் செய்தால் நல்லது. உடல் ஆரோக்கியத்தில் இருந்து வந்த பிரச்னைகள் தீரும்.

**இடபம்**
புத்துணர்வு ஏற்படும். குடும்பத்தில் சந்தோஷம் நிலவும். குறுக்கு வழியில் அழைத்துச் செல்லும் நண்பரை விலக்குங்கள். வியாபாரிகள் சில நன்மைகளை காண்பர். நட்பு வட்டம் விரியும்.

**மிதுனம்**
மனதில் உற்சாகமும் செயல்களில் நேர்த்தியும் நிறைந்திருக்கும். பொருளாதார பிரச்னையில் இருந்து வெளியே வருவீர்கள். குடும்பத்தில் இருந்த பிரச்னைகள் தீரும். மகிழ்ச்சி கூடும்.

**கடகம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். எடுத்த முயற்சிகளில் முழு ஈடுபாட்டுடன் செயல படுவது நல்லது. திட்டமிட்டு பணிகளை செய்து மேலதிகாரியின் பாராட்டை பெறுவீர்கள்.

**சிம்மம்**
பொருளாதாரத்தில் நல்ல வளர்ச்சி தென்படும். சுபமான நாள். வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கை எட்டுவீர்கள். குடும்பத்தில் சந்தோஷம் நிலவும். மாணவர்கள் முன்னேற்றம் காண்பர்.

**கன்னி**
பூர்வீக சொத்துக்களால் ஏற்பட்டிருந்த சிறு குழப்பங்கள் அகலும். ஆன்மிகத்தில் நாட்டம் கூடும். உயரதிகாரியின் ஆதரவு உங்களுக்கு கிடைக்கும். குடும்பத்தினருடன் இருந்த கருத்து வேறுபாடுகள் மறையும்.

**துலாம்**
வெளிநாட்டில் இருந்து வரும் செய்தி மகிழ்ச்சி தரும். நண்பர்களின் ஆதரவால் புதிய முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள். உங்களுக்கு ஆதாயம் தரும் செய்தி வரும். கவலை ஒன்று நீங்கும்.

**விருட்சிகம்**
லாபமும், வருமானமும் சந்தோஷத்தை தரும். உற்சாகமான நாள். திடீர் மாற்றம் ஒன்று நிகழ்ந்து உற்சாகத்தை ஏற்படுத்தும். குடும்பம் மகிழும். சுபச் செய்தி வரும். குடும்பத்தில் அமைதி மீளும். நிதி நிலை உயரும்.

**தனுசு**
சகோதர, சகோதரிகளுடன் ஒற்றுமையும், சந்தோஷமும் நிலவும். நீங்கள் எடுத்துக் கொண்ட பொறுப்பு ஒன்று எளிதாக முடியும். பொருளாதாரத்தேவை நிறைவேறும். உங்களின் உழைப்பு பலன் தரும்.

**மகரம்**
குடும்ப ஒற்றுமை பற்றிய கவலை தீர்ந்து நிம்மதி வரும். பேச்சினால் நன்மை அடைவீர்கள். நண்பர்கள் உயர்வார்கள். உங்களின் முயற்சியால் பகை ஒன்று தீரும். உழைப்பு அதிகமாகும்.

**கும்பம்**
உறவினர்களால் ஏற்பட்ட செலவுகளை ஈடுகட்டுவீர்கள். நண்பர்கள் நன்மை செய்வார்கள். குழந்தைகளால் மகிழ்ச்சி ஏற்படும். நீண்ட நாளாக இருந்து வந்த பிரச்னை ஒன்று தீரும்.

**மீனம்**
எடுத்த செயலில் மிகுந்த முயற்சி செய்து வெற்றி அடைவீர்கள். பொதுநலச்செயல்பாடுகளில் ஆர்வம் அதிகரிக்கும். புதிய முயற்சியில் சுமாரான வெற்றி அடைவீர்கள். வரவு கூடும்.

# தமிழ் புத்தாண்டை தை மாதத்துக்கு மாற்றும் முயற்சியைக் கைவிடுங்கள்

## தமிழக அரசை வலியுறுத்துகின்றார் சசிகலா

சென்னை, டிசெ 04

தமிழ்ப் புத்தாண்டை தை மாதத்திற்கு மாற்றம் செய்கிற முயற்சியைத் தமிழக அரசு கைவிட வேண்டும் என சசிகலா வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அ. தி. மு. க. பொதுச் செயலாளர் எனக் குறிப்பிட்டு சசிகலா நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

"தமிழ்ப் புத்தாண்டை மீண்டும் தை மாதத்திற்கு மாற்றப்போவதாக வரும் செய்திகள் உண்மைதானா? என்ற கேள்வி எல்லோருக்கும் எழுகிறது. இது சம்பந்தமாக தமிழக அரசிடமிருந்து இதுவரை எந்த ஒரு அறிவிப்பும் வந்ததாகத் தெரியவில்லை, பின் எதற்காக, இது போன்ற செய்திகள் பரப்பப் படுகின்றன என்பது புரியாத புதிராக உள்ளது. அதேபோல், கடந்த வாரத்தில், மதுரை ஜெய்ஹிந்த்புரத்தில் உள்ள அம்மா உணவகத்தில் திடீரென்று மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி படம் வைத்ததாக செய்திகள் வந்தன. பின்னர் மறுநாளே அந்தப் படம் அகற்றப்பட்டதாகவும் செய்திகள் வந்தன.

இதுபோன்ற செயல்கள், தமிழக முதல்வர் ஸ்டாலினுக்குத் தெரிந்துதான் நடக்கிறதா? இல்லை அவருக்குத் தெரியாமலேயே ஏதாவது ஓர்அதிகார மையத்தின் தலையீட்டால் நடக்கிறதா? அல்லது அரசு இயந்திரம் முதல்வரின் கட்டுப்பாட்டில் இல்லையா? என்ற அடுக்கடுக்கான கேள்விகள் சாமானிய மக்களுக்குத் தொடர்ந்து எழுவதாகச் சொல்கிறார்கள்.

தமிழ்ப் புத்தாண்டு எதற்காக சித்திரை மாதத்தில் கொண்டாடப்படுகிறது என்பதற்கு சரியான விளக்கத்தைப் பல்வேறு ஆதாரங்களுடன் அன்றே முன்னாள் முதல்வர் ஜெயலலிதா தெரிவித்து இருக்கிறார். அதைச் சரியாகப் புரிந்து கொண்டாலே போதும். மக்களைக் குழப்புபவர்களும் தெளிவடைவார்கள். எனவே இதுபோன்று மக்களுக்கு உதவாத செயல்களில் அரசு தங்கள் நேரத்தைச் செலவிடுவதைத் தவிர்த்து, குடியிருப்புப் பகுதிகளில் தேங்கியுள்ள மழைநீரை அப்புறப்படுத்த வழிவகை செய்தாலே போதும். அதுவே மக்களுக்குப் பயனுள்ளதாக அமையும்.

ஆகையால், தமிழக அரசு, தமிழ்ப் புத்தாண்டை தை மாதத்திற்கு மாற்றம் செய்கின்ற முயற்சியை விட்டுவிட்டு, ஆக்கப்பூர்வமான செயல்களில் தங்கள் நேரத்தைச் செலவழித்து மக்களுக்குப் பயனளிக்கும் திட்டங்களை வழங்க வேண்டும்." இவ்வாறு சசிகலா தெரிவித்துள்ளார்.

# தமிழக விமான நிலையங்களில் கடும் கண்காணிப்புக்கு ஏற்பாடு

## அமைச்சர் சுப்பிரமணியன் தகவல்

சென்னை, டிசெ. 04,

தமிழகத்தில் இதுவரை ஒமைக்ரோன் பாதிப்பு இல்லை. அப்படி ஒருவேளை யாருக்கும் தொற்று உறுதியானால் அதை அரசு வெளிப்படையாக தெரிவிக்கும். அதுவரை யாரும் வதந்திகளை நம்ப வேண்டாம் என்று தமிழக அமைச்சர் மா.சுப்பிரமணியன் கேட்டுக் கொண்டுள்ளார்.

சென்னையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன், சுகாதாரத்துறை செயலாளர் ஜெ.ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோர் பத்திரிகையாளர்களை நேற்று சந்தித்தனர்.

சமூக வலைதளங்களில், தமிழகத்தில் சென்னை, திருச்சி நகரங்களில் ஒமைக்ரான் பரவியுள்ளதாக வெளியான வதந்திகளை ஒட்டி அமைச்சர் செய்தியாளர்கள் சந்திப்பில் விளக்கம் அளித்துப் பேசினார்.

அப்போது அமைச்சர் பேசியதாவது:

ஒமைக்ரோன் தொற்று பரவல் உள்ள நாடுகளிலிருந்து வருபவர்களுக்கு முழுமையாக பரிசோதனை செய்யப்படுகிறது. பரிசோதனை முடிவு வரும்வரை அவர்கள் விமான நிலையத்தில் தங்கவைக்கப்படுகிறார்கள்.

யாருக்காவது தொற்று உறுதி செய்யப்பட்டால் அவர்கள் அரசு மருத்துவமனைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒமைக்ரோன் சிறப்பு பிரிவுகளில் அனுமதிக்கப்படுவார்கள். இதற்காக, மதுரை, திருச்சி, கோவை அரசு மருத்துவமனைகளிலும், சென்னையில் கிங் இன்ஸ்டிட்யூட், ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனை, ஓமந்தூரார் பல்நோக்கு மருத்துவமனைகளில் சிறப்பு பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வார்டிலும் தலா 40 படுக்கைகள் தயார் செய்யப்பட்டுள்ளன.

தமிழகத்தில் இதுவரை ஒமைக்ரோன் பாதிப்பு இல்லை. அப்படி ஒருவேளை யாருக்கும் தொற்று உறுதியானால் அதை அரசு வெளிப்படையாக தெரிவிக்கும். அதுவரை யாரும் வதந்திகளை நம்ப வேண்டாம்.

வேலைக்காக வெளிநாடுகளுக்கு சென்று திரும்புவர்களுக்கு பரிசோதனையை இலவசமாக செய்யவும் தென் ஆப்பிரிக்கா, இஸ்ரேல் உள்ளிட்ட 11 நாடுகளிலிருந்து திரும்புவர்களில் பரிசோதனையை செய்ய முடியாத பொருளாதார நிலையில் பின்தங்கியவர்களுக்கும் பரிசோதனையை இலவசமாக செய்யவும் முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

# அ.தி.மு.க. உட்கட்சித் தேர்தல்களுக்கு தடை விதிக்கக்கோரி நீதிமன்றில் மனு

சென்னை, டிசெ. 04

அ. தி. மு. க. உட்கட்சி தேர்தல்கள் எதிர்வரும் 7 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருக்கும் நிலையில், அதற்குத் தடைவிதிக்கக் கோரி முன்னாள் எம்.பி கே.சி.பழனிசாமி வழக்கு தாக்கல் செய்திருக்கின்றார்.

தேர்தலுக்கு முன்னர் பின்பற்றப்பட வேண்டிய விதிகள் மீறப்பட்டுள்ளதாகவும், பொது செயலாளர் அதிகாரத்தை அபகரிக்கும் நோக்கில் ஓ.பன்னீர்செல்வம் எடப்பாடி பழனிசாமி ஆகியோர் செயல்படுவதாகவும் அவர் குற்றஞ்சாட்டி உள்ளார்.

ஜெயலலிதா மறைவுக்கு பின்னர் அ.தி.மு.க.வில் ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் பதவி புதிதாக உருவாக்கப்பட்டது. அ.தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர்கள் மூலம் ஒருங்கிணைப்பாளராக ஓ.பன்னீர்செல்வமும், இணை ஒருங்கிணைப்பாளராக எடப்பாடி பழனிசாமியும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இதுதொடர்பாக கட்சியின் சட்டத்திட்ட விதிகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு சிறப்பு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த சட்டத்திட்டத்தின் படி, 'அ.தி.மு.க.வில் ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் பதவிக்கு உள் கட்சி தேர்தல் நடத்தப்படும். கட்சியின் அடிப்படை உறுப்பினர்கள் ஒற்றை வாக்கின் மூலம் ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளரை தேர்ந்தெடுப்பார்கள்' என்று அறிவிக்கப்பட்டது. இந்தப் பதவிக்கான தேர்தல் 7 ஆம் திகதி நடைபெறுகிறது. இதற்கான மனு தாக்கல் நேற்று தொடங்கியது.

இந்த நிலையில் இந்த தேர்தலுக்குத் தடைவிதிக்கக் கோரி முன்னாள் எம்.பி கே.சி.பழனிசாமி நேற்று சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். அவர் தாக்கல் செய்துள்ள மனுவில், பொதுக் குழுவில் கட்சி விதிகளில் புதிய திருத்தம் கொண்டு வரப்பட்டு, ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் ஆகியோர் அடிப்படை உறுப்பினர்களால் தேர்ந்து எடுக்கப்படுவார்கள் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இது ஒற்றைத் தலைமை வேண்டும் என்ற கட்சியின் நிறுவுனர் மற்றும் உறுப்பினர்களின் நோக்கத்திற்கு விரோதமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தலுக்கு முன்பாக 21 நாட்களுக்கு முன் அறிவித்தல் கொடுக்க வேண்டுமென்ற விதிகள் காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளது. சங்கங்கள் பதிவுச் சட்டம், அதிமுக கட்சி விதிகள் ஆகியவற்றின் கீழ் தேர்தல் நடத்தும் விதிகளை பின்பற்றாமல் பொது செயலாளர் அதிகாரத்தை அபகரிக்கும் நோக்கில் ஓ.பன்னீர்செல்வம், எடப்பாடி பழனிசாமி ஆகியோர் செயல்படுகிறார்கள். இனால் தேர்தலுக்கு தடை விதிக்க வேண்டும்" என அவர் மனுவில் தெரிவித்துள்ளார்.

# நாடு முழுவதும் காஸ் விநியோகம் நிறுத்தம்!

## வெடிப்பு சம்பவங்களை அடுத்து அரசு உத்தரவு

கொழும்பு, டிசெ. 04

**நாடு முழுவதும் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் உள்நாட்டு சமையல் எரிவாயு சிலிண்டர் விநியோகத்தை தற்காலிகமாக நிறுத்துமாறு அரசு உத்தரவிட்டுள்ளது.**



நாட்டின் பல பகுதிகளில் இடம்பெற்ற எரிவாயு சிலிண்டர் மற்றும் அடுப்பு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகள் நிறைவடைந்துள்ள நிலையில், அது தொடர்பில் முடிவு எடுக்கும் வரை எரிவாயு விநியோகம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

எரிவாயு நிறுவனங்களின் விநியோகம் மற்றும் சில்லறை விற்பனையை இடைநிறுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. இதேவேளை, லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் செயற்பாடுகள் நேற்று முன்தினம் இரவு முதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், எரிவாயு விற்பனையை இடைநிறுத்துவதற்கான எந்தவொரு அறிவிப்பும் தமது நிறுவனத்துக்கு இது வரை கிடைக்கவில்லை என லாப்ஸ் எரிவாயு நிறுவனத்தின் தலைவர் டபிள்யூ.கே.எச்.வெகபிட்டிய தெரிவித்தார். (அ)

# கைவிட்டுவிட்டது சீனா; வரவேண்டும் இந்தியா!

## மனோ கணேசன் அழைப்பு

கொழும்பு, டிசெ. 04

வடக்கில் உள்ள மூன்று தீவுகளில் முன்னெடுக்கவிருந்த மின்னுற்பத்தி திட்டங்களை சீனா இடைநிறுத்தியுள்ள நிலையில், குறித்த திட்டங்களை ஆரம்பிப்பதற்கு இந்தியாவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

இது தொடர்பான அவரின் முகநூல் பதிவு வருமாறு:

வடக்கு தீவுகளில் மறுவிளைவு இல்லாத சுத்தமான சூரியசக்தி மின் நிலையங்களை அமைக்க இருந்த சீனா, இந்தியாவின் பாதுகாப்பு ஆட்சேபனை காரணமாக அங்கிருந்து வாபஸ் பெற்று விட்டது.



ஆனால், அதற்கு பதிலாக அதே மின் உற்பத்தி கட்டமைப்பை மாலைதீவின் 12 ஆளில்லா தீவுகளில் முன்னெடுக்க அந்நாட்டு அரசுடன் சீனா உடன்பாடும் கண்டுள்ளது.

இந்நிலையில், அதேபோல் அதற்கு பதிலாக அதே வடக்கு தீவுகளில் மின் நிலையங்களை அமைக்க இந்தியா உடனடியாக முன் வர வேண்டும்.

ஏனெனில் இந்த இந்தியா-இலங்கை-சீனா கயிறு இழுப்புகளுக்கு மத்தியில் நம் நாட்டுக்கு, சுத்தமான மின்சாரம் தேவை-என்றார். (அ)

# வவுனியாவில் விபத்து!

வவுனியா, டிசெ. 04

வவுனியா, வைவரவபுளியங்குளம் பகுதியில் கட்டுப்பாட்டை இழந்த கார் விபத்துக்குள்ளானதில் மூவர் படுகாயமடைந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன் தினம் இரவு 10.20 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வவுனியா, வைரவபுளியங்குளம் பகுதியில் உள்ள விருந்தகம் ஒன்றின் முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் ஒன்று அங்கிருந்து வேகமாக ரயில் வீதி ஊடாக குருமண்காடு நோக்கி சென்றபோது, சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த கார் வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோ ஒன்றுடன் மோதி தடம் புரண்டது.

இந்த விபத்தில் காரில் பயணித்த மூவர் படு காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பில் வவுனியா போக்கு வரத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



# அஜித் டோவலை சந்தித்து பேசினார் அமைச்சர் பஸில்

புதுடில்லி, டிசெ. 04

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இந்தியா சென்றுள்ள நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலை நேற்று முன்தினம் புதுடில்லியில் சந்தித்துப் பேசினார்.

இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் டோவல் , அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுடன் மிகவும் சுமுகமான உரையாடலில் ஈடுபட்டதுடன், இரு நாடுகளின் பரஸ்பர மூலோபாய நலன்கள் தொடர்பான பல்வேறு பிரச்னைகள் குறித்தும் கலந்துரையாடினார்.

இந்தியாவுக்கான இலங்கை தூதுவர் மிலிந்த மொறகொட மற்றும் திறைசேரியின் செயலாளர் எஸ். ஆர். ஆட்டிகல ஆகியோர் அமைச்சருடன் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர். அஜித் டோவல் இந்தியாவின் ஐந்தாவது தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஆவார். (அ)

# எரிவாயு சிலிண்டர் விவகாரத்தில் நிறுவனங்களே முழுப் பொறுப்பு!

கொழும்பு, டிசெ. 04

எரிவாயு சிலிண்டர்கள் தொடர்பான தற்போதைய பிரச்னைகளுக்கு எரிவாயு நிறுவனங்களே முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டும் என நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

இரண்டு பிரதான எரிவாயு நிறுவனங்களின் குறைபாடுகள் காரணமாக நுகர்வோர் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

வென்னப்புவ பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் அழகியவண்ண, மக்கள் எதிர்நோக்கும் இன்னல்கள் குறித்து வருத்தம் தெரிவித்தார்.

நிறுவனங்களில் காணப்படும் குறைபாடுகளே தற்போதைய நிலைமைக்கு வழிவகுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

எரிவாயு கசிவு வெடிப்புகளை நிவர்த்தி செய்வது தொடர்பாக மிக உயர்ந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். நிறுவனங்கள் தங்கள் உள் பிரச்னைகளை தீர்க்கவேண்டும் என்றும் அமைச்சர் கூறினார். (அ)

# எல்லா குப்பைகளையும் நல்லாட்சிமீது போடாதீர்!

## மைத்திரிபால கடும் விசனம்

கொழும்பு, டிசெ. 04



“எல்லா குப்பைகளையும் நல்லாட்சி மீதே போடவேண்டாம். நல்லாட்சியில் நடந்த நல்ல விடயங்கள் பல உள்ளன. அவை தொடர்பில் கதைப்பதில்லை. கதைப்பதற்கு ஒரு நாளும் போதாது. எனவே, கருத்தரங்கை நடத்தி தெளிவுபடுத்த நான் தயார்.”

-இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் முடிவடைந்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

“அரசமைப்பின் 19 ஆவது திருத்தச்சட்டம் ஊடாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கான அதிகாரங்கள் குறைக்கப்பட்டன. உலகில் எந்த தலைவர், ஆட்சிக்கு வந்த பிறகு தனக்கான அதிகாரங்களைக் குறைத்துக்கொண்டார்? அந்த முன்மாதிரியை நான் வழங்கினேன். பல மாற்றங்களும் இடம்பெற்றுள்ளன. எனவே, குப்பைகளை மட்டும் நல்லாட்சி மீது திணிக்க வேண்டாம்.”-என்றார். (அ)

# பாடத்திட்டத்தை முழுமைப்படுத்த போதிய காலஅவகாசம் இல்லை

## ஆசிரியர்கள் தரப்பில் விசனம்

கொழும்பு, டிசெ. 04

பாடசாலைகளில் இந்த ஆண்டுக்கான பாடத்திட்டத்தை முழுமைப்படுத்தவேண்டுமென கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள கடிதத்தின் காரணமாக, ஆசிரியர்களும், மாணவர்களும் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

பாடத்திட்டத்தை முழுமைப்படுத்த போதியளவு காலம் இல்லை என்று கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அதன் செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

தமக்கு கிடைக்க வேண்டிய பத்தாயிரம் ரூபாய் கொடுப்பனவை வழங்குமாறு கோரி கல்வி கூட்டுறவு பொதுச் சேவைகள் சங்கம் ஆரம்பித்துள்ள பணிப்புறக்கணிப்பு நடவடிக்கை, எதிர்காலத்தில் மேலும் கடுமையாக்கப்படும் எனவும் சங்கத்தின் தலைவர் நந்தன ஹேவகே கூறினார். (அ)

# 6 ஆம் திகதி சபைக்கு வாருங்கள் உங்கள் முகத்திரையை கிழிப்பேன்

## சஜித்துக்கு இந்திக்க அனுருத்த சவால்

கொழும்பு, டிசெ. 04

“முடிந்தால் 6 ஆம் திகதி சபைக்கு வாருங்கள். எல்லாவற்றையும் அம்பலப்படுத்தி, உங்கள் முகத்திரையை கிழிப்பேன்.”

-இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு சவால் விடுத்துள்ளார் கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டடப் பொருட்கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர் இது தொடர்பில் கூறியவை வருமாறு:

தற்போதைய எதிர்க்கட்சித் தலைவரே வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சராக இருந்தார். போஸ்டர்களை ஒட்டவும், பிரசாரம் செய்யவும் அவர் பெரும் தொகை நிதியை செலவிட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் எனக் கூறிக்கொள்ளும் அந்த நபர் 3 ஆயிரம் மில்லியன் ரூபாயை காரணமின்றி செலவு செய்துள்ளார். தற்புகழுக்காக எவரும் இவ்வளவு நிதியை செலவிடமாட்டார்கள். எனவே, இது பற்றி விசாரிப்பதற்கும் தெரிவுக்குழு அவசியம்.

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு தொடர்பில் 6 ஆம் திகதி சபையில் விவாதம் நடக்கவுள்ளது. அன்றைய தினம் சபையில் இருக்குமாறு எதிர்க்கட்சித் தலைவருக்கு சவால் விடுக்கின்றேன். அப்போது இவற்றை அம்பலப்படுத்துவேன். ஆடையின்றி வெளியேறவேண்டிய நிலையே எதிர்க்கட்சித் தலைவருக்கு ஏற்படும்-என்றார். (அ)

# நாம் வெளியேறினால் அரசு ஆட்டம் காணும்!

## சுதந்திரக்கட்சி எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 04

"அரசிலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வெளியேறினால், ஆட்சி கட்டமைப்பே ஸ்தம்பிக்கும் நிலைமை உருவாகும். எமது வெளியேற்றம் சாதாரண சம்பவமாக இருக்காது. சாதாரண பெரும்பான்மையைக்கூட அரசு இழக்க நேரிடும்" _ என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.



ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் அந்தக் கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

கட்சி மறுசீரமைப்பு, எதிர்கால அரசியல் நகர்வுகள் உட்பட சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

சந்திப்பின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் அமைச்சர் மஹிந்த சமரவீர கூறியவை வருமாறு:

அரசிலிருந்து வெளியேறுவது தொடர்பில் கூட்டத்தில் ஆராயப்படவில்லை. எனினும், கட்சி அவ்வாறானதொரு முடிவை எடுக்கும் பட்சத்தில் பதவிகளை துறந்துவிட்டு, வெளியேறுவதற்கு நாம் தயாராகவே இருக்கின்றோம்.

நாம் நாட்டை ஸ்திரமற்ற நிலைக்கு கொண்டுசெல்ல இடமளியோம். அதேபோல எமது முடிவு சஜித், ரணில் மற்றும் இதர தரப்புகளுக்கும் சாதகமாக அமைந்துவிடாது. அவர்களை பலப்படுத்தவேண்டிய தேவை எமக்கு இல்லை. அக்கட்சிகளுடன் இணையவும் மாட்டோம்.

விமல் வீரவன்ஸ, வாசுதேவ நாணயக்கார, உதய கம்மன்பில போன்றவர்களை ஆரம்பத்தில் வெளியேறுமாறு வலியுறுத்தினர். தற்போது சுதந்திரக்கட்சியை இலக்கு வைத்துள்ளனர். இது தொடர்பில் ஜனாதிபதி கவனம் செலுத்தவேண்டும். இவர்கள் ஜனாதிபதியை பலவீனப்படுத்துவதற்கு முற்படுகின்றனரா என்பது பற்றியும் ஆராயப்பட வேண்டும்.

சுதந்திரக்கட்சி அரசிலிருந்து வெளியேறினால் மொட்டு கட்சியில் உள்ளவர்களும் வெளியேறுவார்கள். நாம் வெளியேறும் நாளில் எண்ணிக்கையை அறியலாம். வெளியேறுவதாக இருந்தால் வெறுமனே 14 பேர் மட்டும் வெளியேறமாட்டோம். அரசு மூன்றிலிரண்டு அல்ல சாதாரண பெரும்பான்மையைக்கூட இழக்கும்-என்றார். (அ)

# 2 வருடங்களுக்கு பின் கைதானார் சஹ்ரானிடம் பயிற்சி பெற்ற நபர்

கொழும்பு, டிசெ. 04

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரொருவர் குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவத்துக்கு முன்னதாக சஹ்ரான் ஹாசிம் அம்பாந்தோட்டைப் பகுதியில் நடத்திய அடிப்படைவாத பயிற்சி முகாமில் கலந்துக்கொண்ட குற்றச்சாட்டில் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். இவ்வாறு கைதான நபர் கண்டி- ஹிங்குல பகுதியைச் சேர்ந்த 25 வயதுடையவராவார். இந்நிலையில் சந்தேகநபரிடம் விரிவான விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

# நீர் கட்டணம் உயராது

கொழும்பு, டிசெ. 04

2022 ஆம் ஆண்டிலும் குடிதண்ணீர் கட்டணத்தை அதிகரிக்க மாட்டோமென நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார். 2019 இல் நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் நட்டம் 1,126 மில்லியன் ரூபாயாக இருந்தபோதும்2020 இல் வரிக்குப் பின்னரான இலாபம் 520 மில்லியன் ரூபாய் என்றும் அவர் குறிப்பிட்டார். பாராளுமன்றத்தில் நடைபெற்ற நீர்வழங்கல் அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நீர் வழங்கலும் மலசல கழிவகற்றலும் வருமானம் கிடைக்கும் துறைகளல்ல. அவை மக்கள் நலச் சேவைகளாகும். அதற்கான செலவை பெறவே அந்த சேவை வழங்கலுக்கு மாத்திரம் அறிவிடுகிறோம். 15 அலகு வரை பயன்படுத்தினால் குறைந்த கட்டணமே அறிவிடப்படுகிறது ஆனால் ஒரு அலகுக்கு 50 ரூபாய் வரை செலவாகிறது. சமூகத்தை இணைத்துக்கொண்டு நீர்வழங்கல் திட்டங்களை செயற்படுத்தி வருகிறோம். இதற்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர். கடந்த காலத்தில் வெளிநாட்டு பொறியியலாளர்கள் திட்டங்கள் தயாரிக்க நீண்ட காலம் எடுப்பார்கள். ஆனால் எமது உள்நாட்டு பொறியியலாளர்களின் பங்களிப்புடன் அனைத்து திட்டமிடல்களும் ஒரு வருட காலத்தினுள் நிறைவு செய்யப்பட்டுள்ளன- என்றார். (அ)

# காஸ் வெடிப்பு விவகாரத்தால் பாடசாலைகளுக்கும் பாதிப்பு

கொழும்பு, டிசெ. 04

எரிவாயு கசிவு வெடிப்புச் சம்பவங்கள் காரணமாக பாடசாலை முறை பாதிக்கப்படும் என கல்வி சாரா ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

கண்டியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அந்த சங்கத்தின் பிரதம செயலாளர் அஜித் கே திலகரத்ன, எரிவாயு சிலிண்டர்களை பயன்படுத்தும் பாடசாலைகள் பல உள்ளன. பாடசாலை ஆய்வகங்கள், வீட்டு அறிவியல் ஆய்வகங்கள் மற்றும் பாடசாலை விடுதிகள் போன்ற இடங்களில் எரிவாயு பயன்படுத்தப்படுவதால் இது ஆபத்தை ஏற்படுத்துகிறது-என்றார்.

ஏறக்குறைய 5,500 பாடசாலைகள் எரிவாயு சிலிண்டர்களைப் பயன்படுத்துகின்றன என்று அவர் கூறினார்.

எரிவாயு கசிவு வெடிப்பு ஏற்பட்டால், பாடசாலை கட்டடங்கள் மற்றும் மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள்.

ஆய்வகங்களில் இரசாயன எதிர்வினைகள் மற்றும் வாயு கசிவு வெடிப்பு மிகவும் மோசமான சூழ்நிலையை உருவாக்கும் என்று திலகரத்ன குறிப்பிட்டார்.

# எரிவாயு சிலிண்டரில் கசிவு இல்லை என உறுதிப்படுத்தி கொள்வனவு செய்யுங்கள்

## நுகர்வோருக்கு ஆலோசனை

கொழும்பு, டிசெ. 04

நுகர்வோர் சமையல் எரிவாயு கொள்கலனை கொள்வனவு செய்யும்போது, விற்பனைப் பிரதிநிதியை அணுகி, கொள்கலனில் எரிவாயு கசிவு இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு நுகர்வோருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

எரிவாயு கொள்கலனுடன் தொடர்புடைய வெடிப்புச் சம்பவங்கள் மற்றும் தீப்பரவல்கள் குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணைக் குழு இதனைத் தெரிவித்துள்ளது.

இந்தக் குழுவினால் உடனடி மற்றும் செயன்முறை ரீதியான நடவடிக்கைகள் பொதுமக்களுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளதுடன், இவ்வாறாக 13 பரிந்துரைகளை நுகர்வோருக்காக முன்வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எரிவாயு கொள்கலனுடன் பொருத்தப்படும் ரெகியூலேட்டருக்காக பரிந்துரைக்கப்படும் காலம் ஐந்து வருடங்கள் என்பதுடன், எரிவாயு விநியோக குழாய்க்கு பரிந்துரைக்கப்படும் காலம் இரண்டு வருடங்களாகும்.

சமையல் எரிவாயு கொள்கலன் தொடர்பில் ஏதேனும் பிரச்னை இருக்குமாயின், 0115 811 927 அல்லது 0115 811 929 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்புகொண்டு பொதுமக்கள் அது குறித்து ஜனாதிபதி விசாரணைக் குழுவுக்கு அறிவிக்க முடியும் என் றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மாகாண தேர்தலை பழைய முறையில் நடத்த சுதந்திரக் கட்சி பச்சைக்கொடி!

கொழும்பு, டிசெ. 04

இம்முறை மாத்திரம் மட்டுப்படுத்தப்படும் வகையில் பழைய தேர்தல் முறையிலாவது மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவது பொருத்தமானது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாகப் பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளம் காண்பதற்கும் தேவையான திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழுவில் பரிந்துரைத்தது.



சுதந்திரக் கட்சி சார்பில் பாராளுமன்ற விசேட குழுவில் சாட்சியமளித்த இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர குறிப்பிடுகையில், நீண்டகாலமாக மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படாமையால் பல பிரச்னைகள் ஏற்பட்டுள்ளன.

மாகாண சபைத் தேர்தல் விரைவில் நடத்தப்படவேண்டும் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடு.

அத்துடன் அடுத்த வருட முதலாவது காலாண்டுக்குள் மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை ஆகக் கூடியது 5500 ஆக வரையறுக்கப்பட வேண்டும்-என்றார்.

உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலத்தை நீடிப்பது பொருத்தமற்றது என அமைச்சர் மஹிந்த அமரவீர இங்கு சுட்டிக்காட்டினார். உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும் என்பதே பொது மக்களின் நிலைப்பாடு என்றும் அவர் கூறினார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் அறிவிக்கப்பட்ட பின்னர் தேர்தல் நடத்தப்பட்டு புதிய உறுப்பினர்கள் பதவிப்பிரமாணம் செய்யும்வரை குறித்த நிறுவனங்களின் அதிகாரம் ஆணையாளரின் கீழ் கொண்டுவரப்படவேண்டியதன் அவசியத்தை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இந்தக் குழு முன்னிலையில் சுட்டிக்காட்டினார்.

தற்போதுள்ள சட்டத்தின் கீழ் மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாது என சட்டமா அதிபர் கருதுவதாகவும், அதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகள் கொண்டுவரப்பட வேண்டுமெனவும் பாராளுமன்ற விசேட குழுவின் தலைவர் சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார். (அ)

# நானே அடுத்த பாதுகாப்பு அமைச்சர் மாவீரர் நினைவேந்தலை தடுப்பேன்!

## சபையில் நேற்று சரத் பொன்சேகா சபதம்



கொழும்பு, டிசெ. 04

**“ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் நான்தான் பாதுகாப்பு அமைச்சர். கட்சித் தலைவர் இதனை உறுதிப்படுத்திவிட்டார். மாவீரர் நாள் நிகழ்வுகளுக்கு நிச்சயம் தடை விதிப்பேன். அதற்கான அனுமதியை வழங்கமாட்டேன்.” _ என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர் இது தொடர்பில் கூறியவை வருமாறு:

புலிகள் அப்பாவி மக்களைக் கொன்றனர். மதத் தலங்கள்மீது தாக்குதல் நடத்தினர். மிலேச்சத்தனமாக செயற்பட்டனர். நாட்டை பிளவுபடுத்த நினைத்தனர். இறையாண்மைக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தினர். இப்படியானவர்களை நினைவுகூர அனுமதிக்கக்கூடாது. அவ்வாறு நினைவு கூருவது சட்ட விரோதம்.

சிறைகளிலுள்ள புலிகளை விடுதலை செய்யுங்கள். அதற்கு நாமும் ஆதரவு. என்னைக் கொலை செய்ய வந்த மொரிஷ் என்பவரை முதலில் விடுதலை செய்யுங்கள். இராணுவம் போர்க்குற்றம் இழைக்கவில்லை. இராணுவத் திலுள்ள ஓரிருவர் தவறிழைத்திருக்கலாம்.

அதேவேளை, போர் முடிவடைந்திருந்தாலும் உள்ளக அச்சுறுத்தல் இல்லாவிட்டாலும் பாதுகாப்பு அமைச்சுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட வேண்டும். அவ்வாறு ஒதுக்கக்கூடாது என்ற கருத்துடன் என்னால் உடன்பட முடியாது-என்றார். (அ)

# பேருவளை கடற்கரையில் ஆணின் சடலம்!

கொழும்பு, டிசெ. 04

பேருவளை பொலிஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள கடற்கரைப் பகுதியில் நேற்றுக் காலை அடையாளம் தெரியாத ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்ட நபரின் கழுத்தில் பலத்த காயங்கள் காணப்பட்டதாக பேருவளை பொலிஸார் குறிப்பிட்டனர்.

சடலத்துக்கு அருகாமையில் வெற்றிலையுடன் பல தேசிக் காய்கள் காணப்பட்டன எனவும் கூறப்பட்டது.

மீட்கப்பட்ட சடலம் தொடர்பிலான விரிவான விசாரணைகளை பொலிஸ் குற்றப்பிரிவு அதிகாரிகள் மற்றும் நீதிவான் ஆகியோர் முன்னெடுத்துள்ளனர்.

# வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையில் மூன்று பேருக்கு கோவிட் தொற்று உறுதி

வவுனியா, டிசெ. 04

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உத்தியோகத்தர்கள் மூவருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உத்தியோகத்தர் ஒருவருக்கு உடலில் மாற்றம் ஏற்பட்டதையடுத்து அவருக்கு முன்னெடுக்கப்பட்ட துரித அன்ரிஜென் பரிசோதனையில் கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து குறித்த உத்தியோகத்தருடன் நெருங்கிப் பழகிய உத்தியோகத்தர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட துரித அன்ரிஜென் பரிசோதனையில் மேலும் இருவருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் கோவிட் தொற்றுக்குள்ளான மூவரும் சுகாதார பிரிவினரால் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (அ)

# ஆய்வரங்கத் தொடரின் ஏழாவது நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம், டிசெ. 04

திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபக இயக்குநர் அமரர் அருட்கலாநிதி நீ.மரிய சேவியர் அடிகளாரின் பன்முகப்படுத்தப்பட்ட பணிகளை ஆவணப்படுத்தும் முகமாக “கலைத்தூது நீ.மரிய சேவியர் அடிகள்: ஒரு பன்முகப் பார்வை“ என்னும் தலைப்பில் மெய்நிகர் வழியில் சூம் செயலிக்கூடாக திருமறைக் கலாமன்றம் மாதந்தோறும் நடத்தி வருகின்ற ஆய்வரங்கத் தொடரின் ஏழாவது நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை மாலை 7.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் பிரதி அதிபர் செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் “ தமிழ் இலக்கிய வளர்ச்சியில் மரியசேவியர் அடிகள் “என்னும் தலைப்பில் எழுத்தாளரும்,யாழ்,தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் தமிழ் ஆசிரியருமான சி.ரமேஷ் ஆய்வினை வழங்கவுள்ளார். ஆர்வமுள்ள அனைவரும் சூம் செயலி இலக்கம் 7893644809,கடவுச் சொல் உிய என்பதற்கூடாக இந்நிகழ்வில் இணைந்துகொள்ள முடியும். (அ)



# டேவிட் பீரிஸ் மோட்டார் நிறுவனத்தின் வேலைத்தளத்துக்கு யாழில் அடிக்கல்

யாழ்ப்பாணம், டிசெ. 04

கொக்குவில் பகுதியில் டேவிட் பீரிஸ் மோட்டார் நிறுவனத்தின் வேலைத்தளத்துக்கான அடிக்கல், சம்பிரதாயபூர்வமாக நேற்று முன்தினம் நாட்டி வைக்கப்பட்டது.

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா அடிக்கல் நாட்டி வைத்ததை தொடர்ந்து டேவிட் பீரிஸ் குழுமத்தின் தலைவர் உட்பட விருந்தினர்கள் அடிக்கலை நாட்டினர்.




டேவிட் பீரிஸ் குழுமத்தின் தலைவரும், முகாமைத்துவப் பணிப்பாளருமான ரோஹண திஸநாயக்க உள்ளிட்ட ஏனைய அதிகாரிகள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

405, பிரவுண் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் யாழ்ப்பாணம் என்ற முகவரியில் டேவிட் பீரிஸ் மோட்டார் நிறுவனத்தின் வேலைத்தளம் அமைக்கப்படுவதுடன், பஜாஜ் அசல் உதிரிப்பாக காட்சியறையும் அந்த இடத்திலேயே செயல்படவுள்ளது. (அ)

# திருமறைக் கலாமன்ற இயக்குநராக அ. பி. ஜெயசேகரம் அடிகள் நியமனம்







யாழ்ப்பாணம், டிசெ. 04

திருமறைக் கலாமன்றத்தின் புதிய கௌரவ இயக்குநராக அருட்தந்தை அ. பி. ஜெயசேகரம் அடிகள் நியமிக்கப்பட்டார்.

நேற்றுக் காலை திருமறைக் கலாமன்ற தினத்தைச் சிறப்பிக்கும் முகமாக இடம்பெற்ற திருப்பலியின் நிறைவில் நடந்த ஒன்றுகூடலில் இந்த அறிவிப்பை பிரதி இயக்குநர் யோ. யோண்சன் ராஜ்குமார் விடுத்தார்.

இதற்கு முன்பாக 50 ஆவது குருத்துவப் பணியை நிறைவு செய்துள்ள ஜெயசேகரம் அடிகள் திருமறைக் கலாமன்றத்தால் கௌரவிக்கப்பட்டார். இதன்போது மன்றத்தின் நிர்வாக இயக்குநர் அருள்பணி ஜெறோ செல்வநாயகம் அடிகள் பொன்னாடை போர்க்க, செயலாளர் சி. எம். நெல்சன் மாலை அணிவித்தார்.

ஸ்தாபக இயக்குநர் நீ.மரிய சேவியர் அடிகளாரின் மறைவுக்குப் பின்னர் பல மாதகாலமாக நிலவி வந்த வெற்றிடம் நேற்று நிரப்பப்பட்டது.

ஸ்தாபக இயக்குநரின் சிந்தனைகளையே ஜெயசேகரம் அடிகளாரும் கொண்டுள்ளமை இன, மத, மொழி வேறுபாடுகளைக் கடந்து கலை என்ற தளத்தில் மனிதர்களை ஒன்றிணைத்து பயணிக்கும் திருமறைக் கலாமன்றத்தின் பணிகள் இனிதே தொடர மேலும் வலுச் சேர்க்கும்.

இந்நிகழ்வில் மன்ற அங்கத்தவர்கள்,ஆதரவாளர்கள் உட்பட பெருமளவானோர் கலந்து சிறப்பித்தனர். (அ)

# இருபாலை பகுதியில் எரிவாயு வெடித்தது!

யாழ்ப்பாணம், டிசெ. 04

கோப்பாய் பகுதியில் எரிவாயு அடுப்பு வெடித்து சிதறிய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கோப்பாய் தெற்கு இருபாலையில் உள்ள ஒரு வீட்டில் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தபோது அடுப்பு எரிவதை அவதானித்த வீட்டு உரிமையாளர் வெளியில் ஓடிச் சென்று அயலவரை அழைத்துள்ளார்.

இதன்போது உடனடியாக ஓடிச் சென்ற அயலவர்கள் எரிவாயு சிலிண்டரை அகற்றி தீயை அணைத்தமையால் பாரிய சேதங்கள் எதுவும் ஏற்படாது தடுக்கப்பட்டது.

அண்மைக்காலமாக இலங்கை முழுவதும் எரிவாயு அடுப்புகள், எரிவாயு வெடிப்பு சம்பவங்கள் தொடர்கின்றன.

இந்த நிலையிலேயே கோப்பாய் பகுதியில் எரிவாயு அடுப்பு வெடித்து சிதறிய சம்பவம் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. குறித்த சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# வடக்கு, கிழக்கை 'தமிழர் தாயகம்' என அழைப்பதில் தவறில்லை

## விக்னேஸ்வரன் பதிலளிக்கிறார்

"இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகள் தமிழரின் தாயகமாக 3000 வருடங்களுக்கு மேல் இருந்து வந்துள்ளது. இதனை 1987ஆம் ஆண்டின் இலங்கை இந்திய ஒப்பந்தம் ஏற்றுள்ளது. ஆகவே "தமிழர் தாயகம்" என்று பெரும்பான்மை தமிழர் வசிக்கும் இலங்கையின் வடக்கு கிழக்கை அழைப்பதில் எந்தப் பிழையும் இல்லை" என தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும், வடமாகாண முன்னாள் முதலமைச்சருமான க. வி. விக்னேஸ்வரன் தெரிவித்திருக்கின்றார்.

பாராளுமன்றத்தில் கடந்த வாரம் கிளப்பப்பட்ட ஒரு சர்ச்சை குறித்து 'வாரம் ஒரு கேள்வி'யில் பதிலளித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவரது கேள்வியும் பதிலும் வருமாறு:

**கேள்வி:-** சமீபத்தில் பாராளுமன்றத்தில் "தமிழர் தாயகம்" என்ற சொற்றொடருக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டதோடு அரச பாராளுமன்றப் பிரதிநிதிகள் அவற்றை ஹன்சார்டிலிருந்து நீக்குமாறும் கோரியிருந்தனர். அப்பொழுது மன்றுக்குத் தலைமை வகித்த வேலு குமார் அதனை சபாநாயகரின் கவனத்திற்குக் கொண்டு வருவதாகத் தெரிவித்திருந்தார். கிளப்பப்பட்ட எதிர்ப்புகள் பற்றி அவர் எவ்வித தீர்மானமும் எடுக்கவில்லை. இந்த நாடு ஒரு சிங்கள நாடு என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா?

**பதில்:-** இல்லை. நான் அவ்வாறு ஏற்கவில்லை.

முதலில் இது ஒரு சிங்கள நாடல்ல. சிங்களவரைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு நாடே இது. ஆனால், வடக்கு, கிழக்கில் உள்ள பெரும்பான்மையானோர் தமிழ் பேசுபவர்கள். பிரித்தானியர் நிர்வாக நோக்கங்களுக்காக இந் நாட்டை 1833ஆம் ஆண்டில் ஒன்றாக்கிய பொழுது யாழ்ப்பாண இராச்சியம் ஒன்று வடக்கில் இருந்தது. மேலும் கிழக்கின் தமிழ் சிற்றரசர்கள் கண்டிய மன்னனுக்கு திரை கட்டி வந்தனர். உங்களுக்குத் தெரியும் இறுதிக் கண்டிய மன்னன் தமிழனாக இருந்தது மட்டுமன்றி 1815இல் பிரித்தானியருடன் செய்த ஒப்பந்தத்தில் தமிழிலேயே கையொப்பம் இட்டிருந்தார். அதே போல கண்டிய சிங்களத் தலைவர்கள் சிலரும் அவ்வாறே செய்தனர்.

எந்தவிதத்திலும் உங்களால் இலங்கையை ஒரு சிங்கள அல்லது பௌத்த சிங்கள நாடாக அழைக்க முடியாது. இந் நாடு சிங்களம் பேசும் பெரும்பான்மையோர் வசிக்கும் பிரதேசங்களையும் தமிழ்ப் பேசும் பெரும்பான்மையர் வசிக்கும் பிரதேசங்களையும் உள்ளடக்கிய நாடு. 3000 வருடங்களுக்கு முன்னர் இந் நாட்டில் வாழ்ந்த பூர்வீக வாசிகள் தமிழையே பேசினர். அப்பொழுது சிங்கள மொழி என்ற ஒரு மொழி பிறந்திருக்கவில்லை. ஆகையால் அப்பொழுது சிங்களவர்கள் இருந்திருக்கவில்லை. சிங்கள மொழியானது தமிழையும் பாளியையும் கொண்ட ஒரு கலப்பு மொழியாகும். தமிழ் மொழி மூலமாக சில சமஸ்ஹிருத சொற்கள் சிங்கள மொழியைச் சென்றடைந்தன. முதலாவது சிங்கள இலக்கண நூலான "சிதத் சங்கரய" கி.பி.13ம் நூற்றாண்டளவில்தான் எழுதப்பட்டது. சிங்கள மொழியானது 3000 வருடங்களுக்கு முன்னரே இருந்திருப்பின் அம் மொழி ஓர் இலக்கண நூலைப் பிறப்பிப்பதற்கு ஏன் 1700 வருடங்களை எடுத்தது?

சிங்கள மக்கள் மகாவம்சத்தைத் தழுவிய பிழையான சரித்திர தகவல்களால் ஊட்டப்பட்டிருக்கின்றார்கள். மகாவம்சம் எழுதப்பட்ட பொழுது சிங்கள மொழியென ஒன்று உதித்திருக்கவில்லை. ஆகையால்தான் மகாவம்சம் பாளி மொழியில் எழுதப்பட்டது. "அத்தகதா" வும் கூட பாளி மொழியிலேயே எழுதப்பட்டது. கி.பி 5ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் சிங்கள மொழி நூல்களோ சிங்களக் கல்வெட்டுச் சான்றுகளோ எவையும் இதுவரை கண்டெடுக்கப்படவில்லை. மகாவம்சத்தின் ஆசிரியர் மகாநாம ஒவ்வொரு செய்யுளின் முடிவிலும் அதன் இறுதிப் பாடல் வரிகள் ஒவ்வொன்றிலும் பௌத்த சமயத்தின் பெருமையை வெளிப்படுத்துவதற்காகவே தாம் நூலை எழுதியுள்ளதாக கூறியிருக்கின்றார். ஆகவே, மகாவம்சம் ஒரு சரித்திர வலுக் கொண்ட நூல் அல்ல.


> சிங்கள மக்கள் மகாவம்சத்தைத் தழுவிய பிழையான சரித்திர தகவல்களால் ஊட்டப்பட்டிருக்கின்றார்கள். மகாவம்சம் எழுதப்பட்ட பொழுது சிங்கள மொழியென ஒன்று உதித்திருக்கவில்லை.

கடந்த 73 வருட காலமாக சிங்கள அரசியல்வாதிகளும் சிங்கள புத்திஜீவிகளும் சிங்கள மொழியைப் பற்றியும் சிங்களவர் சரித்திரத்தைப் பற்றியும் திரிபுபடுத்தப்பட்ட கருத்துக்களைத் தந்திரமாக வெளியிட்டு வந்துள்ளார்கள்.

கடந்த நூற்றாண்டின் அரை இறுதியில் உத்தியோகபூர்வமாக வடக்குக் கிழக்கில் காலங்காலமாக வழங்கி வரப்பட்ட தமிழ் இடங்களின் பெயர்கள் சிங்கள மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டன. உதாரணமாக, பல நூற்றாண்டுகாலமாக மணலாறு எனத் தமிழில் இருந்த பெயரானது வெலிஓயா என சுதந்திரத்தின் பின்னர் மாற்றப்பட்டது. (மணல் - வெலி - Sand/ ஆறு – ஓய – River). இம் மொழிபெயர்ப்புகள் செய்யப்பட்டு சிறிது காலத்திற்குப் பின்னர் பௌத்த துறவிகளும் ஏனையோர்களும் வடகிழக்குப் பிரதேசங்களில் உள்ள பூர்வீகத் தமிழ்ப் பெயர்கள் ஆதியில் சிங்களப் பெயர்களாக இருந்தன எனவும் அவை பின்னர் தமிழுக்கு மாற்றப்பட்டன எனவும் கி.பி 10ஆம் நூற்றாண்டில் சோழர் ஆட்சிக் காலத்திலேயே தமிழ் மொழிக்கு மாற்றப்பட்டன எனவும் கூறத் தொடங்கினர். அதாவது, தாம் தமிழில் இருந்து மொழி பெயர்த்த சிங்களச் சொற்களை முதலில் இருந்த சொற்களெனவும் ஆதித் தமிழ்ச் சொற்களைப் பின்னர் வந்த மொழி பெயர்ப்புக்கள் என்றும் கூறத் தலைப்பட்டனர்.

சிங்கள மொழி கி.பி 5ஆம் 6ஆம் நூற்றாண்டுகளில் தான் உருவாகியதால் 2000, 3000 வருடங்களுக்கு முன்னர் எப்படி சிங்கள மொழி இருந்திருக்க முடியும்? சமீபகாலத்தைய மொழி பெயர்ப்புகளுக்கு முன்னர் வடக்கு கிழக்கில் சிங்களப் பெயர்கள் இருந்ததற்கான ஆதாரங்கள் இல்லை. ஆனால், பௌத்தத்தை சிங்கள மொழியுடன் இணைத்து எங்கெங்கெல்லாம் பௌத்த சின்னங்கள் இருக்கின்றனவோ அவை அனைத்தும் சிங்கள மக்கள் பூர்வீகமாகக் குடியிருந்த இடங்கள் என ஏமாற்றி வருகின்றனர்.

இது முற்றுமுழுதான ஒரு தவறு. பேராசிரியர் சுனில் ஆரியரட்ண என்பவர் சில வருடங்களுக்கு முன் சிங்கள மொழியில் 'தெமள பௌத்தயோ' (தமிழ் பௌத்தர்கள்) என ஒரு நூலை எழுதியுள்ளார். எங்களுடைய நாட்டின் சரித்திரத்தில் தமிழர்கள் ஒரு காலப்பகுதியில் பௌத்தர்களாக இருந்தார்கள் என்பதை அவர் ஏற்றுக் கொண்டுள்ளார்.



அக் காலப்பகுதியில் சிங்கள மொழி இருந்திருக்கவில்லை. ஆகவே தமிழ் பௌத்தர்கள் பெருவாரியாக வாழ்ந்த காலப்பகுதியில் சிங்களவர்கள் எவரும் வட கிழக்கில் இருந்திருக்கவில்லை.

எனினும் சிங்கள இனவாத சரித்திர ஆசிரியர்களும் திட்டமிடும் பௌத்த துறவிகளும் கி.பி. 5ஆம் 6ஆம் நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்து பின்னர் சிங்கள மொழிக்கு வந்த பாளிச் சொற்களைக் குறிப்பிட்டு அவற்றை சிங்கள மொழி எனக் கூற முற்பட்டனர். அவை சிங்கள மொழிச் சொற்கள் அல்ல் அவை பாளி மொழிச் சொற்கள்!

பிற்காலப் பகுதியில் பாளி மொழிச் சொற்கள் ஒரு புதிய மொழிக்குள் புகுந்து அதை சிங்கள மொழி ஆக்க உதவின. கல்வெட்டுகளிலும் வேறு சாதனங்களிலும் காணப்படும் பாளி மொழிச் சொற்களை அடையாளம் கண்ட சிங்கள சரித்திர ஆசிரியர்கள் அவற்றை சிங்கள மொழி எனக் கூற முற்பட்டனர். ஆனால், அவை பிற்காலப் பகுதிகளில் சிங்கள மொழிக்குள் வந்த பாளி மொழிச் சொற்களேயாவன.

3000 வருடங்களுக்கு முன்னர் சிங்கள மொழி இருந்ததாகச் சில சிங்கள புத்த பிக்குகள் கூறி வருவதானது எப்படி இருக்கின்றதென்றால் நான் பிறப்பதற்கு பல வருடங்களுக்கு முன்னர் இறந்த எனது பாட்டனாரின் காலத்தில் நான் இருந்திருக்கின்றேன் என்று கூறுவதற்கு ஒப்பானதாகும். நான் என் பாட்டனாரில் இருந்து வந்ததால் நான் என் பாட்டனார் காலத்தில் இருந்தேன் என்பது போன்றே இவர்கள் வாதம் இருக்கின்றது.

அதாவது பாளியில் இருந்து சிங்களம் வந்தது. எனவே பாளி இருந்த போது சிங்களமும் இருந்தது என்பதே இவர்கள் வாதம்.

ஆனால், இலங்கையை ஒரு தமிழ் இந்து நாடு என குறிப்பிடுவதற்குரிய சாத்தியக் கூறுகள் பல உண்டு. சைவத் தமிழர்கள் தான் இந்தத் தீவின் பூர்வீகக் குடிகள். வடக்கில் கீரிமலையில் உள்ள நகுலேஸ்வரத்தில் உள்ள சிவலிங்கமும் வடமேற்கில் மன்னாரில் உள்ள திருக்கேதீஸ்வரமும் மேற்கில் சிலாபத்தில் உள்ள முன்னேஸ்வரமும் கிழக்கில் திருகோணமலையில் உள்ள கோணேஸ்வரமும் தெற்கில் தெய்வேந்திரமுனையில் உள்ள தொண்டீஸ்வரமும் சரித்திரத்திற்கு முந்திய காலம் முதல் இந் நாட்டைப் பாதுகாத்து வந்தன என்பது ஐதீகம். வரலாற்று ரீதியாக அவை சரித்திர காலத்திற்கு முன்பிருந்தவை என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

பூர்வீகத் தமிழ் வாசிகளின் வழியிலேயே சிங்களவர்கள் வந்ததோடு தமிழில் இருந்து வந்த சிங்கள மொழியையும் கி.பி 5ம் 6ம் நூற்றாண்டு காலப்பகுதியில் ஏற்றுக் கொண்டார்கள். அவர்களுடைய மொழியானது தமிழோடு பாளியும் வேறு பேச்சு மொழிகளையும் உள்ளடக்கிய ஒரு கலவை.

இப்பொழுது எந்த உண்மையான சரித்திர ஆசிரியரும் ஆரிய முற்றுகை இந்த நாட்டின் மேல் இருந்ததென்பதை நம்புவதில்லை. மேற்கத்திய நாட்டினர் எமது சரித்திரத்தைத் தவறாக விளங்கியிருந்தனர். ஆரியன் என்ற சொல்லானது ஓர் இனத்தைக் குறிப்பிடவில்லை. ஆகையால் சிங்களவர்கள் தங்களை ஆரிய இனத்தினர் எனக் குறிப்பிட முடியாது. அவர்கள் 1500 வருடங்களுக்கு முன்னர் ஒரு புதிய மொழியை ஏற்றுக் கொண்ட உள்ளூர் தமிழர்கள் ஆவர். சிங்களவர்களும் தமிழர்களும் ஒரு பொது உற்பத்தியில் இருந்து வந்தவர்கள் என்பது சமீபத்தில் நடத்திய உயிரணு ஆராய்ச்சியில் இருந்து நிரூபிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகள் தமிழரின் தாயகமாக 3000 வருடங்களுக்கு மேல் இருந்து வந்துள்ளது. இதனை 1987ஆம் ஆண்டின் இலங்கை இந்திய ஒப்பந்தம் ஏற்றுள்ளது. ஆகவே "தமிழர் தாயகம்" என்று பெரும்பான்மை தமிழர் வசிக்கும் இலங்கையின் வடக்கு கிழக்கை அழைப்பதில் எந்தப் பிழையும் இல்லை. ■

ஈழநாடு





நியூசிலாந்து சிற்சபேசன்

வெள்ளப்பெருக்கு என்பது சென்னைக்குப் புதியதல்ல. ஆனால், முன்பெல்லாம் வெள்ளம் வேகமாக வழிந்தோடிவிடுவதுண்டு. வீடுகளிலே வெள்ளம் புகுவதென்பது அரிதாகும். ஆனால் தற்போதைய நிலை அப்படியில்லை. சென்னைத் தெருக்களிலே படகு ஓட்டக்கூடிய அளவுகளிலே வெள்ளப்பெருக்கின் நீரோட்டம் அதிகரிக்கின்றது.

# சென்னை வெள்ளத்துக்கு மழையைச் சபிக்கலாமா?

கொரோனாப் பேரிடரிலே இன்று உலகமே திணறுகின்றது. ஆனால், நீண்டகால விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய காலநிலை பேரிடிரை எளிதில் கடந்துபோய் விடுகின்றது. இயற்கைக்கு எதிரான மனிதனின் அத்துமீறல்கள் உச்சம் தொடுகின்றன. நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என பஞ்சபூதங்களுடனான சீண்டல்கள் அதிகரிக்கின்றன. காடுகள் அழிக்கப்படுகின்றன. நீர்நிலைகள் காணாமல் ஆக்கப்படுகின்றன. காற்று அசுத்தப்படுகின்றது. ஆகாயம் மாசாக்கப்படுகின்றது. ஜீவகாருண்யம் “கிலோ என்ன விலை?” என்று கேட்கும்தொனி உச்சம் தொடுகின்றது. மிருகங்கள் கொல்லப்படுகின்றன. இவ்வாறாக இயற்கை இடையறாது சீண்டப்படுகின்றது. சீரற்ற மழைவீழ்ச்சி, புயல், வெள்ளப்பெருக்கு, காட்டுத்தீ, சுட்டெரிக்கும் வெய்யில் என இயற்கையின் எச்சரிக்கைகள் உதாசீனம் செய்யப்படுகின்றன. அண்மைக்காலங்களிலே சிங்காரச்சென்னை அடிக்கடி வெள்ளத்தில் மிதக்கின்றது. அஃது காலநிலை பேரிடருக்கு தரமான ஓர் எடுத்துக்காட்டாகும்.

வெள்ளப்பெருக்கு என்பது சென்னைக்குப் புதியதல்ல. ஆனால், முன்பெல்லாம் வெள்ளம் வேகமாக வழிந்தோடிவிடுவதுண்டு. வீடுகளிலே வெள்ளம் புகுவதென்பது அரிதாகும். ஆனால் தற்போதைய நிலை அப்படியில்லை. சென்னைத் தெருக்களிலே படகு ஓட்டக்கூடிய அளவுகளிலே வெள்ளப்பெருக்கின் நீரோட்டம் அதிகரிக்கின்றது. சனத்தொகைப்பெருக்கம், கட்டுமானவீக்கம் போன்றவை வானுயர்கின்றன. அதனாலேயும்கூட வெள்ளம் வடிந்தோட வழியில்லாமல் போய்விடுகின்றது.

“தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை” எனத் திருவள்ளுவர் சொன்னார். ஆனால், இப்போதெல்லாம் கொழுநன் தொழாமலேயே மழை கொட்டித்தீர்க்கின்றது. ஐப்பசியில் ஆரம்பமாகி மார்கழி வரை தொடருகின்ற வடகிழக்குப் பருவமழையே தமிழ்நாட்டின் முக்கியமான நீராதாரமாகும். காலநிலை மாற்றங்களினால் மழை வீழ்ச்சி சீரற்றதாகின்றது. மழை நாட்கள் குறைவடைகின்றன. குறுகிய காலப்பகுதியில் பெருமழை பொழிகின்றது. ஒரே மாதத்தில் நூறு சென்ரி மீற்றருக்கு அதிகமாக மழை பதிவாகியிருப்பது, கடந்த இருநூறு ஆண்டுகளில் இஃது நான்காவது தடவையாகும். கடும் மழையும் வெள்ளப்பெருக்கும் அடிக்கடி ஏற்படுகின்றன. 2004, 2015 என்ற வரிசையிலே 2021ஆம் ஆண்டும் சேர்ந்திருக்கின்றது.

பெருநகரங்களில் கனதியான மழையினால் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்படுகின்றபோது, மழைநீர் வடிகின்ற வாய்க்கால்கள் திணறுவது இயல்பாகும். அதனாலேயே, பெரிய நகரங்களிலே பாரிய பாதாளக் கிடங்குகளை அமைக்கின்றனர். பெருமழை ஏற்படுகின்றபோது, மழை நீர்வடிகின்ற வாய்க்கால்களிலிருந்து பெருகுகின்ற, கூடுதல் நீரைப் பாதாளக் கிடங்குகளுக்குக் கடத்துகின்றனர். மழை ஓய்ந்தபின்னர், பாதாளக் கிடங்குகளிலிருந்து நீரை வாய்க்கால் வழியாக கடலுக்கு வெளியேற்றுகின்றனர். ஆனால், பண்டைய காலத்திலே தமிழர் மேலதிக மழைநீரைக் கூட கடலுக்கு அதிகமாக வெளியேற்றவில்லை. ஏரிகள், குளங்கள், கால்வாய்கள் என அமைத்து மழைநீரைச் சேமித்தனர். இயற்கை அளிக்கும் மழைநீர் வளத்தைப் போற்றிப்பாதுகாத்தனர்.



இயற்கையின் நில அமைப்பையும், வெள்ளத்தின் ஓட்டத்தையும் கணக்கிட்டே பண்டையதமிழர் ஏரிகள், குளங்கள் போன்றவற்றை அமைத்தனர். ஏரிகள், குளங்கள், வயல்கள் போன்றவற்றை ஆக்கிரமித்துவிட்டு மழை வெள்ளம் குடிமனைகளுக்குள்ளே வருவதாகப் புலம்புவதனால் பயனுண்டோ?. அதனாலேயே, பயனில்சொல் பாராட்டுவானை மகன்எனல் மக்கட் பதடியெனல் என இயற்கை சீறுகின்றது.

சென்னையிலே மூன்று பெரிய ஆறுகள் காணப்படுகின்றன. வடக்கிலே கொசஸ்தலை ஆறு, மத்தியிலே கூவம் ஆறு, தெற்கிலே அடையாறு என மழை நீரைக் கடலிலே கொண்டுசேர்ப்பதற்கான கட்டமைப்பை அவை கொண்டவையாகும். அவற்றுக்கு நீர்கொண்டு வருகின்ற வரத்துக் கால்வாய்களின் எண்ணிக்கை பதினாறாகும். மேலதிகமாக, பக்கிங்ஹாம் கால்வாய் உள்ளது. செம்பரம்பாக்கம், புழல், சோழவரம், செங்குன்றம் என நான்கு நீர்த்தேக்கங்கள் உள்ளன. மேலதிகமாக, நாலாயிரத்துக்கு மேற்பட்ட சிறிய ஏரிகளும் குளங்களும் ஒருகாலத்தில் இருந்தன. அவையனைத்தினதும் கொள்ளளவு, சென்னை பெருநகரத்தின் ஒருவருடத்துக்குத் தேவையான குடிநீர் தேவையைப் பூர்த்திசெய்திருக்கக்கூடியதாகும் இத்தகைய செழிப்பான நீர் முகாமைத்துவ வளங்கள் பாதுகாக்கப்படவில்லை. அதனாலேயே, மாரிகாலத்தில் வெள்ளத்திலும், கோடைகாலத்தில் குடிநீர் பற்றாக்குறையினாலும் சிங்காரச்சென்னை அவதியுறுகின்றது.

சென்னையிலே ஆறுகள் இருப்பதான தகவல் பலருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தலாம். “எங்கே ஆறு இருகின்றது?” என்றுதான் பலரும் கேட்பார்கள். எல்லாம் காலத்தின் கோலமாகும். ஒரு காலத்தில் சென்னை ஆறுகளிலே மீன்கள் துள்ளி விளையாடின. தற்போது சென்னை ஆறுகளிலோ அல்லது கால்வாய்களிலோ மீன்கள் இல்லை. அங்கே கழிவுநீரையும் குப்பை கூழங்களையுமே காணலாம்.

ஆறுகள் குறுகிவிட்டன. ஏரி, குளங்கள் காணாமல்போய்விட்டன. ஆறுகளை அண்டிய வெள்ளச்சமவெளிகள் ஆக்கிரமிக்கப்பட்டுவிட்டன. அங்கெல்லாம் குடிசைகள் எழும்பிவிட்டன. அதனால், ஆற்றின் அகலம் குறைந்துவிட்டது. ஆழமும் குறைந்துவிட்டது. வெள்ளத்தைக் கடத்தவேண்டிய கால்வாய்கள் கழிவுகளைச் சுமக்கின்றன குளங்கள் இருந்த இடங்களிலே வானுயர்ந்த கட்டிடங்கள் கண்சிமிட்டுகின்றன.

மழைகாலங்களிலே நீரைச் சேமித்தல், அவ்வாறு சேமிக்கப்பட்ட நீரை ஆண்டு முழுவதும் பயன்படுத்திக்கொள்தல் என்னும் நுட்பமான நீர்முகாமைத்துவமே பண்டைய தமிழகத்தின் வரலாறாகும். ஆனால், நீர்முகாமைத்துவத்திலே திணறுகின்றமையே இன்றைய நிலையாகும்.

வீதிகளிலும் வீடுகளிலும் வெள்ளம் பெருக்கெடுப்பதற்கு பெருமழை காரணமென மக்கள் நினைக்கின்றனர். அதனால், கொட்டித்தீர்க்கும் மழையைக் கண்டு சினமடைகின்றனர். மழையைச் சபிக்கின்றனர். மனிதர்களுக்குத் தங்களுடைய முதுகு தெரிவதில்லையல்லவா. பஞ்சபூதங்களுடனான சீண்டல் ஏற்படுத்தக்கூடிய விளைவுகள் கவனத்துக்கு வருவதில்லை. மழை இல்லாமல் மனிதர்களால் வாழவே முடியாது. அதிலும் சென்னை போன்ற பெருநகரம் மாரிகாலத்தில் வெள்ளப் பெருக்கினாலும், கோடைகாலத்தில் தண்ணீர் பற்றாக்குறையினாலும் திண்டாடுகின்றது. ஆக, பிரச்னை மழை அல்ல. மனிதர்களேயாவர். ▮



# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - I
நேரம் : 1 மணித்தியாலம்

21) பின்வரும் கூற்றுக்கள் ஒரு செயற்பாட்டின்போது நடைபெற்றவைகளாகும். அவை ஒழுங்குமுறையின்றி உள்ளதனால் அவற்றை ஒழுங்குபடுத்தும் போது வரும் சரியான விடையைத் தெரிவு செய்க?

**அ.** அதன்பின்னர் அம்மாவுடன் சந்தைக்குச் சென்றேன்.

**ஆ.** இருபது நிமிடங்கள் உடற்பயிற்சி செய்தேன்.

**இ.** இன்று ஞாயிற்றுக்கிழமை தாமதமாக எழுந்தேன்.


**ஈ.** அதன்பின்னர் அம்மாவிற்கு உதவினேன்.


**உ.** காலை உணவு தோசை அது எனக்கு மிகவும் பிடிக்கும்.

**ஊ.** அம்மா காலை உணவைத் தந்தார்.

1) இ,ஆ,ஈ,ஊ,உ,அ  2) இ,ஆ,ஈ,ஊ,அ,உ  3) இ,ஈ,ஆ,உ,ஊ,அ

22) சதுரவடிவத் தாளொன்றை இரண்டு தடவைகள் மடித்து புள்ளிக்கோட்டின் வழியே வெட்டும்போது தோன்றும் உருவினைத் தெரிவு செய்க?







1)   2)   3) 

23) சக்திகா புத்தகமொன்றில் 100 ஆம் பக்கத்திலிருந்து 121 ஆம் பக்கம் வரை தொடர்ச்சியாக வாசித்தாள் ஆயின் சக்திகா வாசித்த பக்கங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

1) 21  2) 20  3) 22


24) தரப்பட்டுள்ள கோலத்தினை அவதானித்து அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க?


..........................

1)   2)   3) 

25) நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றிற்கு ஒவ்வொரு 3 மணித்தியாலத்திற்கும் 1*l* 500*ml* மண்ணெண்ணெய் தேவை. அவ் இயந்திரம் காலை 7.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை இயங்குவதற்குத் தேவையான மண்ணெண்ணெயின் அளவு யாது?

1) 4*l* 500*ml*  2) 5*l*  3) 3*l* 500*ml*

26) 


A பெட்டியினுள் B அளவிலான எத்தனை பெட்டிகளை உள்ளே வைக்க முடியும்?

1) 12  2) 20  3) 24

27) கீழே தரப்பட்ட நிகழ்வை வாசித்து பொருத்தமான எதிர்வுகூறலைத் தெரிவு செய்க.

- **நிசாந் பாடசாலை விட்டு வீடு செல்லும்போது பார்வை இழந்த ஒருவர் வெள்ளைப் பிரம்புடன் வீதியோரம் நிற்பதைக் கண்டான். அந்நேரம் நிசாந் செய்யக்கூடியது?**


1) அவரைப் பார்த்ததும் பார்க்காதது போல் செல்லல்.
2) அவர் வீதியைக் கடந்து செல்ல உதவி செய்தல்.
3) அவரைப் பார்த்து நகைத்துச் செல்லல்.

❖ **பின்வரும் தகவலைக் கொண்டு சரியான விடையைத் தெரிவு செய்க.**

| | |
|---|---|
| சட்டை + சேலை | = ரூபாய் 320.00 |
| சட்டை + சேலை + பூமாலை + காப்பு | = ரூபாய் 470.00 |
| 2 சட்டைகள் + 2 சேலைகள் + 2 பூமாலைகள் | = ரூபாய் 840.00 |

28) பூமாலை ஒன்றின் விலை யாது?

1) ரூபாய் 100.00  2) ரூபாய் 50.00  3) ரூபாய் 200.00

29) 

இவ்வுரு ஒரேயளவான சதுரமுகிக் குற்றிகளால் ஆக்கப்பட்டுள்ளது எனின் இங்குள்ள சிறிய சதுரமுகிக் குற்றிகளின் எண்ணிக்கை யாது?

1) 36  2) 35  3) 37

## விடைகள்

21) 01
22) 01
23) 03
24) 02
25) 01
26) 03
27) 02
28) 02
29) 03

# வடக்கு மக்களின் மனதை வெல்ல முன்வர வேண்டும் ஆளுநர் ஜீவன்

## தமிழ்த் தேசியக் கட்சி கோரிக்கை

யாழ்ப்பாணம், டிச.04

**“வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா வடக்கைச் சேர்ந்தவர். பிறப்பால் தமிழர். தகைமைகளின் அடிப்படையில் நியமிக்கப்பட்டவர். உணர்வுபூர்வமான விவகாரங்களில் வடக்கு மக்களின் மனங்களைக் காயப்படுத்தாமலும் கோபப்படுத்தாமலும் வெல்வதற்கு அவர் முன்வர வேண்டும் என்பதே எமது ஒரேயொரு வேண்டுகோள்.”**

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி ந. ஸ்ரீகாந்தா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: -

“வடக்கில் மேற்கொள்ளப்படும் சட்ட ரீதியான காணி அளவீடுகளுக்குத் தொடர்ந்தும் இடையூறு விளைவித்தால் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டி ஏற்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்திருப்பதாக செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

கடந்த 2 ஆண்டுகளுக்கு மேலாக வடக்கு மாகாணத்தில், குறிப்பாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் முன்னெடுக்கப்பட்ட காணி அளவீடுகளுக்கு எதிராக சம்பந்தப்பட்ட மக்களும் அரசியல் செயற்பாட்டாளர்களும் இணைந்து எழுப்பியிருந்த எதிர்ப்புக் குரல்களின் ஓர் அங்கமாகவே மாதகலில் காட்டப்பட்ட எதிர்ப்பும் அமைந்துள்ளது.

போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுவிட்டது என்று இலங்கை அரசு பகிரங்கமாகப் பிரகடனப்படுத்தி 12 ஆண்டுகள் உருண்டோடிவிட்ட பின்னரும், போர் நிகழ்ந்திருந்த வடக்கு, கிழக்கு மாகாணங்களில் படைத்தரப்பின் பிரசன்னம் என்பது போர்க்காலத்தைப் போலவே தொடர்ந்தும் பேணப்பட்டு வருகின்றது. பல்வேறு படைத்தளங்களும் மேலும் விஸ்தரிக்கப்பட்டுப் பலப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தச் சூழ்நிலையில் வடக்கு மாகாணத்தின் கரையோரப் பகுதிகளில் உள்ள கடற்படை முகாம்களும் மேலும் விஸ்தரிக்கப்பட்டு வந்துள்ளன.

இந்தியாவின் தமிழ் நாட்டிலிருந்து இலங்கையில் கள்ளக் குடியேற்றம் மேற்கொள்ளப்படுவதைத் தடுப்பது என்ற பெயரில் 1957இல் காரைநகரில் நிறுவப்பட்ட கடற்படைத்தளம் தொடர்ந்து விஸ்தரிக்கப்பட்டு ஒரு பாரிய தளமாக நிலைத்து நிற்கையிலும்கூட இந்த விஸ்தரிப்புக்கள் தொடர்கின்றன.

இன்னுமோர் பாரிய கடற்படைத் தளம் காங்கேசன்துறையிலும் இருக்கின்றது. ஆயினும், மாதகலில் உள்ள கடற்படை முகாமின் தேவைக்காகத் தனியார் காணி ஒன்றை சுவீகரிக்கும் திட்டத்துடன் முன்னெடுக்கப்பட்ட அளவீட்டு நடவடிக்கைகளுக்குபி பொதுமக்கள் தரப்பில் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இப்போது வடக்கு மாகாண



ஆளுநரால் விடுக்கப்பட்டிருக்கும் சட்ட நடவடிக்கை தொடர்பான எச்சரிக்கை, நீடித்துக் கொண்டிருக்கும் காணி அபகரிப்புப் பிரச்சினையை மேலும் சிக்கல் அடைய வைத்துப் பாரிய போராட்டங்கள் மேற்கொள்ளப்படக் கூடிய நிலைமையை ஏற்படுத்திவிடும் என்று எச்சரிக்கையை விடுக்க விரும்புகின்றோம்.

தம்மைப் பாதிக்கும் எந்தவொரு அரச நடவடிக்கைக்கும் எதிராக சமூகமட்டத்தில் எவரும் சட்டத்துக்கு அமைவாக எதிர்ப்புத் தெரிவிக்க முடியும். அரசியல் சாசனத்தில் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் இந்த உரிமை நீதிமன்றங்களினாலும் பாதுகாக்கப்படுகின்றது.

மாதகல் உட்பட வடக்கில் தொடரும் காணி அபகரிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக இந்த உரிமையின் அடிப்படையிலேயே எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன.

வடக்கைப் பொறுத்த மட்டில் இது ஒன்றும் புதிய விடயமல்ல, புதிய ஆளுநர் வடக்குக்கு வருவதற்கு முன்பிருந்தே நிலைகொண்டு நீடித்து நிற்கும் விவகாரம்.

இந்தப் பிரச்னையில் அதிகாரபூர்வமாகத் தலையிடுவதற்கு சட்டத்தின் கீழ் ஆளுநருக்கு இடமில்லை. தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களோடு வடக்கு மாகாண சபை இயங்க முடியாமல் ஸ்தம்பிக்க வைக்கப்பட்டிருக்கும் நிலையில், அதன் சகல அதிகாரங்களையும் கையாளும் ஆளுநருக்கு காணி மற்றும் பொலிஸ் துறை தொடர்பான எந்த அதிகாரமும் கிடையாது.

அரசியல் சாசனத்தின் 13ஆவது திருத்தத்தின் கீழ் மாகாண சபைகளுக்குரிய காணி மற்றும் பொலிஸ் துறை சம்பந்தப்பட்ட அதிகாரங்கள் இன்னமும் பகிரப்பட்டிராத நிலையில், அந்த அதிகாரங்கள் எவையும் ஆளுநருக்குக் கிடையாது. மாறாக, இந்த அதிகாரங்கள் மத்திய அரசிடமே உள்ளன. இதுதான் யதார்த்தம்.

நிலைமை இப்படி இருக்கையில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப் போவதாக ஆளுநர் எச்சரிப்பது சிறுபிள்ளைத்தனமானது.

பதவி ஏற்ற கையோடு வடக்கில் வாள்வெட்டுக் குழுக்களை அடக்கப் போவதாக ஆளுநர் அறிவித்தபோது, அது நல்ல நிலைப்பாடாக இருந்தாலும், அது தொடர்பில் அவருக்கு அதிகாரம் இல்லை என்பதை அப்போது நாம் சுட்டிக்காட்ட விரும்பியிருக்கவில்லை. ஏனெனில், பதவி ஏற்றுக்கொண்ட நிலையில் எதிர் மறையான கருத்தோடு அவரை வரவேற்பது அரசியல் நாகரிகம் அல்ல என்றே நாம் கருதினோம்.

பூச்சியத்துக்குள்ளே ஒரு இராச்சியத்தை ஆள்வது போன்ற கனவுகள் கலைவது பொதுவாக சகலருக்கும் நன்மையானது.

காணி அபகரிப்புக்கு எதிரான நடவடிக்கைகள் சம்பந்தமாக சட்டம் பாய வேண்டுமானால் கொழும்பிலிருந்துதான் அது ஏவப்பட வேண்டும். நெருக்கடிக்கு ஆளாகியிருக்கும் அரசு, எவர் தூண்டினாலும் இன்றைய சூழ்நிலையில் அதனைத் தவிர்க்கவே விரும்பும் என்பது எமது கணிப்பு. மாறாக சட்ட நடவடிக்கைகள் தொடுக்கப்படுமானால், சிறு எண்ணிக்கையில் மக்கள் கலந்துகொள்ளும் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு பதிலாக பாரிய போராட்டங்களுக்கே அவை அடிகோலும்.

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா சட்டத்தின் ஆட்சி தொடர்பில் கரிசனை காட்டும் அதேவேளையில் பொதுமக்களுக்கு எதிராக பொல்லுகளோடும் மிரட்டல்களோடும் அன்றைய தினம் மாதகலில் அரங்கேற்றப்பட்ட சட்டவிரோத சம்பவங்கள் பற்றியும் தமது கவனத்தைச் செலுத்த வேண்டும் என நாம் விரும்புகின்றோம்” - என்றுள்ளது. (இ)

---

## சேவையிலிருந்து விலக்கப்பட்டார் பொலிஸ் அதிகாரி

கொழும்பு, டிசெ. 04

பொலிஸ் குற்றப் பதிவுப் பிரிவின் குற்றப் புலனாய்வு பகுப்பாய்வு அலுவலகத்தின் பொறுப்பதிகாரி சேவையில் இருந்து விலக்கப்பட்டார்.

குறித்த பொலிஸ் அதிகாரி எவ்வித அனுமதியுமின்றி சட்டவிரோதமான முறையில் வெளிநாடு சென்றுள்ளார்.

இதனையடுத்தே அவர் சேவையில் இருந்து விலக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

---



## மல்லிகா இல்ல சங்கத்தின் நூற்றாண்டு வெற்றி விழா

கொழும்பு, டிச. 04

மல்லிகா இல்ல சங்கத்தின் நூற்றாண்டு வெற்றி விழா, பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் தலைமையில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதமர், மல்லிகா ஹேவாவிதாரணவின் உருவப்படத்துக்கு மலரஞ்சலி செலுத்தினார். பிரதமரின் பாரியார் ஷிரந்தி ராஜபக்சவும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டார்.

இதன்போது நினைவு முத்திரையும், முதல் நாள் உறையும் வெளியிடப்பட்டது. வெகுசன ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெருமவால் நினைவு முத்திரை மற்றும் முதல் நாள் உறை பிரதமர் மற்றும் பிரதமரின் பாரியார் ஆகியோரிடம் வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மல்லிகா இல்லச் சங்கத்தின் முன்னாள் தலைவர்கள் ஐவருக்கு பிரதமரால் நூற்றாண்டு நினைவு பரிசு வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் அமைச்சர்களான பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ், முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய, தபால்மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன, மல்லிகா இல்லச் சங்கத்தின் தலைவர் தமயந்தி டி அல்விஸ் பெர் னாண்டோ உள்ளிட்ட மல் லிகா இல்லச் சங்க உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஸ்ரீமத் அநகாரிக தர்மபாலவின் தாயாரான மல்லிகா ஹேவாவிதாரணவின் எண்ணக் கருவுக்கமைய, மல்லிகா இல்லச் சங்கம் 1920ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 09ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

ஆதரவற்ற பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு நிவாரணம் அளிப்பதே இதன் நோக்காகும். (இ)

---



## பாரம்பரிய விவசாய நடவடிக்கை மன்னார் மாவட்டத்தில் ஆரம்பம்

மன்னார், டிசெ. 04

‘பாரம்பரிய விவசாய செய்கை ஊடாக நஞ்சற்ற உணவு உற்பத்தி’ எனும் தொனிப்பொருளில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் மெசிடோவினால் மன்னார் மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படும் விவசாய செய்கையின் பாரம்பரிய விதைப்பு நேற்று முன்தினம் வியாழக்கிழமை வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தமிழர்களின் பாரம்பரிய முறைகளின் படி மாடுகள் அலங்கரிக்கப்பட்டு கலப்பை ஏற்றி உழுது கிழக்கு பார்த்து பண்டைய பாரம்பரிய நெல் விதை இனங்களான சின்னட்டி, மொட்டக்கறுப்பன் போன்ற விதைகள் விதைக்கப்பட்டன.



இந்த நிகழ்வில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் இணைப்பாளர் ஜாட்சன் பிகிறாடோ, மெசிடோ நிறுவன ஊழியர்கள் பாரம்பரிய விவசாய செய்கையாளர்கள் கலந்து கொண்டு விதைப்பு நடவடிக்கைகளை மேற் கொண்டனர்.

குறித்த நெற் செய்கையின்போது முழுவதும் சேதன உரம் பயன்படுத்தப்படவுள்ளதுடன் அறுவடை நடவடிக்கைகளும் பாரம்பரிய முறையில் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஒஸ்லோவில் நத்தார் விருந்துண்ட 60 பேருக்கு ஒமைக்ரோன் தொற்று?

## வியாழன் நள்ளிரவு முதல் தடைகள் அறிவிப்பு




ஒஸ்லோ, டிசெ. 04

நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் உணவகம் ஒன்றில் கடந்த வெள்ளியன்று நத்தார் விருந்து பசாரத்தில் கலந்துகொண்டவர்கள் மத்தியில் ஒமைக்ரோன் வைரஸ் பரவிவருகிறது.

தொற்றாளர்களது மாதிரிகள் டெல்ராவைவிடவும் மாறுபாடான புதிய மரபு வடிவத்தைக் கொண்டிருப்பது தெரியவந்திருக்கிறது என்ற தகவலை நோர்வே ஊடகங்கள் வெளியிட்டுள்ளன.

சுமார் 50 முதல் 60 பேருக்கு வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாகவும் அவர்களில் சிலரை ஒமைக்ரோன் வைரஸ் பீடித்திருப்பது தெரியவந்திருப்பதாகவும் அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.ஒரு பெரும் கொத்தணியாக ஒமைக்ரோன் வைரஸ் நாட்டுக்குள் தலையெடுத்திருப்பதை அடுத்து நோர்வேயின் தொழில் கட்சிப் பிரதமர் ஜோனாஸ் கர் ஸ்ரோர் நேற்றுமுன்தினம் மாலை அவசர செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினார்.

ஒஸ்லோ நகரிலும் சூழவுள்ள பிரதேசங்களிலும் புதிதாகக் கட்டுப்பாடுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. நாட்டின் எல்லைகளில் கட்டுப்பாடுகள் இறுக்கப்பட்டுள்ளன. கை குலுக்கல் போன்றவற்றைத் தவிர்த்து சமூக இடைவெளியைப் பேணு மாறு பொது மக்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

ஒஸ்லோவில் மத்திய பகுதியான அகர் பிரையேஜில் உள்ள லூயிஸ் உணவகம் மற்றும் அருந்தகத்தில் வெள்ளி இரவு நடந்த நத்தார் விருந்தில் கலந்துகொண்டவர்களில் சிலர் அண்மையில் தென் ஆபிரிக்காவில் இருந்து திரும்பியவர்கள் என்று கூறப்படுகிறது. விருந்தில் கலந்துகொண்ட ஒருவர் மறுநாள் அங்குள்ள மற்றொரு அருந்தகத்தில் நடந்த நிகழ்விலும் பங்குகொண்டார் என்பது தெரியவந்துள்ளது. இரண்டு உணவகங்களிலும் விருந்துண்டவர்களும் அவர்களோடு தொடர்புடையவர்களும் தங்களை பரிசோதனை செய்வதுடன் தாங்களாகவே தனிமைப்படுத்திக் கொள்ளுமாறு ஒஸ்லோ நகரசபை அவசர அறிக்கை ஒன்றில் கேட்டிருக்கிறது. (அ)

# டெல்டாவை விட பாதிப்பு குறைவானதே! ஒமைக்ரோன் குறித்து அச்சம் வேண்டாம்!

## தென்னாபிரிக்க மருத்துவ சங்கம் கூறுகிறது



கேப்டவுண், டிசெ. 04

டெல்டா உரு திரிபு வைரஸ் பாதிப்பை விட ஆரம்ப கட்ட நிலையில் ஒமிக்ரோன் திரிபு பாதிப்பு குறைவாகவே உள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளதாக தென்னாபிரிக்க மருத்துவ சங்கத்தின் தலைவி ஏஞ்சலிக் கோட்ஸி தெரிவித்துள்ளார்.

எனவே, ஒமைக்ரோன் குறித்து தேவையற்ற பயம் கொள்ள தேவையில்லை எனவும் அவர் கூறினார்.

தற்போதுவரை கோவிட் தடுப்பூசிகள் அனைத்து உரு திரிவுகளுக்கு எதிராகவும் பாதுகாப்பளிக்கின்றன. இளம் வயது மற்றும் இணை நோய்கள் உள்ளவர்கள் யாராக இருந்தாலும் தடுப்பூசி போடப்பட்டவர்களுக்கு லேசான அறிகுறிகள் தான் உள்ளன.

தற்போது கண்டறியப்பட்டுள்ள ஒமைக்ரோனால் டெல்டா திரிபை விட ஆரம்ப கட்ட நிலையில் உள்ள பாதிப்பு குறைவாகத்தான் உள்ளது. ஆரம்ப கட்டத்தில்தான் உள்ளோம். இனி வரும் காலங்களில் இதன் வீரியம் பற்றி தெரியவரும். மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை குறைவாகத்தான் உள்ளது எனவும் ஏஞ்சலிக் கோட்ஸி குறிப்பிட்டார்.

ஒமைக்ரோன் திரிபு தொற்றுக்குள்ளாகி பாதிக்கப்பட்டவர்களுக்கு பெரும்பாலும் உடல் நிலை சோர்வாக இருக்கும். உடல்வலி காணப்படும். பாதிக்கப்பட்ட நபருக்கு கடுமையான தலைவலி மற்றும் சோர்வு காணப்படும்.

எனினும் ஒமைக்ரோன் தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் வாசனையின்மை சுவை இழப்பு, அல்லது கடுமையான காய்ச்சல் குறித்த அறிகுறிகளை அனுபவிப்பதற்கான ஆதாரங்கள் இதுவரை கிடைக்கவில்லை. எனவே ஒமிக்ரோன் குறித்து தேவையின்றி அச்சப்படத் தேவையில்லை எனவும் தென்னாபிரிக்க மருத்துவ சங்கத்தின் தலைவர் கூறினார். (அ)

# பயண கட்டுப்பாடுகளை கடுமையாக்கியது அமெ.!

## ஒமைக்ரோன் தொற்று பரவலை அடுத்து



நியூயோர்க், டிசெ. 04

அமெரிக்காவில் இதுவரை 8 பேருக்கு ஒமைக்ரோன் திரிபு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் கடுமையான கோவிட் -19 பயண விதிகளை அந்நாட்டு ஜனாதிபதி ஜோ பைடன் வெளியிட்டுள்ளார். எனினும் மற்றொரு முடக்க நிலையை அறிவிக்கும் திட்டம் எதுவும் தற்போது இல்லை எனவும் பைடன் தெரிவித்துள்ளார்.

நியூயோர்க்கில் 5 பேர், கலிபோர்னியா, மினசோட்டா, கொலராடோவில் தலா ஒருவருக்கு இதுவரை ஒமைக்ரோன் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் பயணக் கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்பட்டுள்ளன.

நேற்று முன் தினம் வியாழக்கிழமை அறிவிக்கப்பட்ட புதிய கட்டுப்பாடுகளின் கீழ் அமெரிக்கா வரும் அனைத்து சர்வதேச பயணிகளும் புறப்படுவதற்கு 24 மணி நேரத்துக்குள் எடுக்கப்பட்ட கோவிட் தொற்றில்லை என்ற மருத்துவ சான்றிதழைச் சமர்ப்பிக்கவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. முழுமையாகத் தடுப்பூசிகளைப் போட்டுக்கொண்டவர்களுக்கும் இந்த நடைமுறை பொருந்தும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், விமானங்கள், ரயில்கள் மற்றும் பஸ்களில் பயணம் செய்வோர் கட்டாயம் முககவசம் அணியவேண்டும் என்ற உத்தரவு எதிர்வரும் மார்ச் மாதம் வரை நீடிக்கப்படும் எனவும் ஜனாதிபதி ஜோ பைடன் தனது புதிய உத்தரவில் தெரிவித்துள்ளார்.

அத்துடன், கோவிட் பரிசோதனைகளும் அதிகரிக்கப்படும். வீடுகளுக்கே சென்று பரிசோதனை மேற்கொள்ளும் நடைமுறையும் விரிவுபடுத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஒமைக்ரோன் தொற்றுக்குள்ளாகி உறுதிப்படுத்தப்பட்டவர்கள் லேசான அறிகுறிகளை மட்டுமே அனுபவித்துவருவதாக அமெரிக்க பிராந்திய சுகாதார அதிகாரிகள் அறிவித்துள்ளனர். (அ)

# ஜேர்மனி அடுத்த வருட ஆரம்பத்தில் தடுப்பூசியை கட்டாயமாக்க திட்டம்!

## ஊசி ஏற்றாதோருக்கு கதவடைப்பு

பேர்ளின், டிசெ. 04

ஜேர்மனியின் மத்திய, மாநில அரசுகள் இணைந்து புதிய கோவிட் கட்டுப்பாடுகளை நடைமுறைப் படுத்த இணங்கியுள்ளன. அதன்படி தடுப்பூசி ஏற்றாதவர்களுக்குப் பல தடைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

புத்தாண்டு பிறக்கும் சமயத்தில் வானவெடி வேடிக்கைகள் மற்றும் களியாட்ட நிகழ்வுகள் முற்றாகத் தடை செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பட்டாசு மற்றும் களியாட்டங்களுடன் தொடர்புடைய விபத்துக்களில் காயமடைபவர்களால் மருத்துவமனைகளுக்கு ஏற்படக்கூடிய நெருக்குதல்களைத் தவிர்ப்பதற்காகவே வெடிகொளுத் திப் புதுவருடத்தைக் கொண்டாடுவதைத் தடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் சான்சிலர் அங்கெலா மெர்கல் மற்றும் அடுத்த வாரம் பதவியேற்கவுள்ள புதிய சான்சிலர் ஓலாப் சோல்ஸ் ஆகிய இருவரும் புதிய கட்டுப்பாடுகள் தொடர்பில் நாட்டின் 16 மாநிலங்களினதும் தலைவர்களோடு இணக்கத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

நாட்டில் தடுப்பூசியைக் கட்டாயமாக்குவதற்காக அடுத்த ஆண்டு பெப்ரவரியில் பாராளுமன்றத்தின் ஒப்புதல் பெறப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

■ உணவகம், அருந்தகம் , அருங்காட்சியகம், சினிமா மற்றும் வர்த் தக நிலையங்களுக்குள் தடுப்பூசி ஏற்றியோரும், தொற்றுக்குள்ளாகி அதிலிருந்து மீண்டவர்களுமே அனுமதிக்கப்படுவர்.

■ ஒரு லட்சத்துக்கு 350 பேர் என்ற வீதத்தில் தொற்று உள்ள பகுதிகளில் இரவு விடுதிகள், இசை அரங்குகள் மூடப்படும்.

■ உதைபந்தாட்ட அரங்குகளில் ஆகக்கூடியது 15 ஆயிரம் பார்வையாளர்களே அனுமதிக்கப்படுவர்.

■ தடுப்பூசி ஏற்றாதவர்கள் தாங்களும் வேறு இரண்டு பேரும் மட்டுமே வீடுகளுக்குள் ஒன்று கூடமுடியும்.

ஏற்கனவே நடைமுறையில் உள்ள 2ஜி, 3ஜி கட்டுப்பாடுகளுடன் தேவைக்கு ஏற்ப புதிய விதிகளை அந்தந்த மாநிலங்கள் அமுல் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொற்றின் உச்சக் கட்டத்தை எதிர்கொண்டுள்ள ஜேர்மனியில் கடந்த 24 மணிநேரத்தில் 388 பேர் உயிரிழந்துள்ளனர். சுமார் 74 ஆயிரம் புதிய தொற்றுக்கள் பதிவாகி உள்ளன. பேர்ளின் உட்பட பல பகுதிகளில் ஒமைக் ரோன் தொற்றாளர்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

நாட்டில் சுமார் 68 சதவீதமானவர்கள் மட்டுமே இதுவரை தடுப் பூசியை முழுமையாகப் பெற்றுள் ளனர். அங்கெலா மெர்கலும் புதிய சான்சிலர் ஓலாப் சோல்ஸூம் தடுப்பூசியை தேசிய அளவில் கட்டாயமாக்கும் திட்டத்தை ஆதரிக்கின்றனர். அதற்கான சட்ட மூலம் ஒன்றை அடுத்த ஆண்டு பெப்ரவரியில் பாராளுமன்றத்தில் விவாதிப்பதற்குத் திட்டமிடப்பட் டுள்ளது.

அண்மையில் இது போன்ற ஒரு சட்டம் ஒஸ்ரியாவில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. தடுப்பூசியைக் கட்டாயமாக்கும் வேளை நெருங்கி விட்டது என்று ஐரோப்பிய ஒன்றியத் தின் தலைவர் உர்சுலா வான் டெர் லேயன் சில தினங்களுக்கு முன்னர் கூறியிருக் கிறார். (அ)

# கனடாவில் பாலின மாற்று

## அறுவை சிகிச்சை தடை?

ஒட்டாவா, டிசெ. 04

கனடாவில் பாலின மாற்று அறுவை சிகிச்சைக்கு தடை கோரும் சட்டமூலம், கனடா பாராளுமன்றத்தின் கீழ் சபையில் (மக்கள் சபை) நிறைவேற் றப்பட்டுள்ளது.

இந்த சட்டமூலம் அடுத்த கட்டமாக மேல் சபையான செனட் சபையின் ஒப்புதலைப் பெற வேண்டும். இந்த சட்ட மூலம், மேல்சபையிலும் நிறைவேறி சட்டமாகி விட்டால், கனடாவில் யாரும் பாலின மாற்று அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள முடியாது.

இந்த சட்ட சட்ட மூலத்தை ஆளும் லிபரல் கட்சி மட்டுமல்லாது, எதிர்க்கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சியினரும் ஆதரித்தனர்.

இதற்காக கன்சர்வேட்டிவ் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுடன், லிபரல் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கை குலுக்கியதும், கட்டித்தழுவியதும் அங்கு பெரும் வரவேற்பை பெற்றது.

இந்த சட்டலும் மீது தனது கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் சுதந்திரமாக வாக்கு அளிக்க எதிர்க்கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சித்தலைவர் எரின் ஓ டூல் அனுமதி அளித்திருந்தார். (அ)



## நியூசிக்கு எதிரான டெஸ்ட் இந்தியா முதல்நாளில் 221/4

மும்பை, டிசெ. 04

நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் முதல் நாள் முடிவில் இந்திய அணி 4 விக்கெட்களை இழந்து 221 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

இந்தியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான 2ஆவது டெஸ்ட் மும்பையில் நேற்று தொடங்கியது. காயம் காரணமாக ரஹானே, இஷாந்த் சர்மா, ஜடேஜா என முதல் டெஸ்டில் விளையாடிய மூன்று வீரர்கள் மும்பை டெஸ்டில் விலகினர்.

அவர்களுக்குப் பதிலாக விராட் கோலி, சிராஜ், ஜெயந்த் யாதவ் ஆகியோர் இந்திய அணியில் சேர்க்கப்பட்டனர். காயம் காரணமாக நியூசிலாந்து அணித் தலைவர் கேன் வில்லியம்சனும் விலகினார். அவருக்குப் பதிலாக ரொம் லதாம் தலைமை பொறுப்பை ஏற்றதுடன், மிற்செல் அணியில் சேரக்கப்பட்டார்.

நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணித் தலைவர் விராட் கோலி, துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தார்.

தொடக்க வீரர்களாகக் களமிறங்கிய ஷுப்மன் கில்லும் மயங்க் அகர்வாலும் நியூசிலாந்தின் பந்துவீச்சை நன்கு எதிர்கொண்டார்கள். ஜேமைசன் வீசிய முதல் ஓவரிலேயே மூன்று பௌண்டரிகள் அடித்தார் கில். இருவரும் சுழல்பந்து வீச்சையும் எளிதாகக் கையாண்டார்கள். இதனால் தொடக்கக் கூட்டணியைப் பிரிக்க நியூசிலாந்து அணி தடுமாறியது. 27ஆவது ஓவரின் முடிவில் இந்திய அணி விக்கெட் இழப்பின்றி 80 ஓட்டங்கள் எடுத்து வலுவான நிலையில் இருந்தது.

இதன்பின்னர், ஷுப்மன் கில் 44 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்கச் செய்தார் அஜாஸ் பட்டேல். தனது அடுத்த ஓவரில் ஓட்டம் எதுவும் எடுக்காமல் புஜாராவை டக் அவுட் செய்தார் அஜாஸ் பட்டேல். இதன்பிறகு களமிறங்கினார் விராட் கோலி.

அந்த ஓவரின் கடைசிப் பந்தில் கோலியை எல். பி. டபிள்யூ செய்தார் அஜாஸ் பட்டேல். டக் அவுட் ஆன கோலி நடுவரின் முடிவை எதிர்த்து டி. ஆர். எஸ். முறையீடு செய்தார். பந்து முதலில் துடுப்பில் பட்டதா அல்லது கால் காப்பில் பட்டதா என்பது தெளிவாகத் தெரியாத நிலையில் நடுவரின் முடிவை மாற்ற முடியாது என 3ஆம் நடுவர் அறிவித்தார். இதில் அதிர்ச்சியடைந்த கோலி, கள நடுவரிடம் விளக்கம் கேட்டார். பிறகு கோபத்துடன் ஓய்வறைக்கு சென்றார்.

மயங்க் அகர்வால், 119 பந்துகளில் அரைச் சதமெடுத்தார். தேநீர் இடைவேளையின்போது இந்திய அணி 37 ஓவர்களில் 3 விக்கெட்களை இழந்து 111 ஓட்டங்கள் எடுத்தது. மயங்க் அகர்வால் 52, ஷ்ரேயாஷ் ஐயர் 7ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்கள்.

பிறகு மயங்க் அகர்வால் - ஷ்ரேயாஷ் ஐயர் கூட்டணி நன்றாக விளையாடி ஓட்டங்கள் சேர்த்தது. இந்தக் கூட்டணி 80 பந்துகளில் 50 ஓட்டங்கள் எடுத்தார்கள். 3 பௌண்ட்ரிகள் அடித்த ஸ்ரேயாஷ் ஐயர், 18 ஓட்டங்களில் அஜாஸ் படேல் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். இதன்பிறகு களமிறங்கிய சஹா, மயங்க் அகர்வாலுக்கு நல்ல இணையாக விளங்கினார். 196 பந்துகளில் தனது 4-வது டெஸ்ட் சதத்தை அடித்தார் மயங்க் அகர்வால்.

முதல் நாள் முடிவில் இந்திய அணி 70 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 221 ஓட்டங்கள் எடுத்துள்ளது. மயங்க் அகர்வால் 120, சஹா 25 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதல் உள்ளனர். (ஐ)

### லசித், ரமேஷ் சுழல் ஜாலம்:

# மேற்கிந்தியாவுக்கு எதிரான தொடர் முழுமையாக இலங்கை வசமானது!

காலி, டிசெ. 04

ரமேஷ் மெண்டிஸ் 43ஆவது ஓவரில் 3 விக்கெட்களை கைப்பற்றி அசத்தியதுடன், 5 விக்கெட்களை கைப்பற்றினார். அதேநேரம், மற்றொரு சுழல் பந்து வீச்சாளரான லசித் எம்புல்தெனிய 5 விக்கெட்களை கைப்பற்றி சாதித்தார். இந்த இரு சுழல் பந்துவீச்சாளர்களிடமும் சிக்கிய மேற்கிந்தியத் தீவுகள் 132 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழக்க இரண்டாவது டெஸ்ட் போட்டியை 164 ஓட்டங்களால் வென்று தொடரை முழுமையாக வென்றது இலங்கை அணி.

இந்த வெற்றியின் மூலம் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடருக்கான புள்ளிகளை அப்படியே வென்றுள்ளது இலங்கை அணி.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக காலியில் நடக்கும் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் ஐந்தாவதும் - இறுதி நாளுமான நேற்று இலங்கை அணி துடுப்பெடுத்தாடியது.

நான்காம் நாள் முடிவில் தனஞ்சய டீ சில்வா 153, லசித் எம்புல்தெனிய 25 ஓட்டங்களுடன் தொடர்ந்து துடுப்பெடுத்தாடினார்கள். நேற்று, 2.4 ஓவர்கள் துடுப்பெடுத்தாடியது இந்த இணை. லசித் எம்புல்தெனிய 39 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழக்கவே, இலங்கை அணி ஆட்டத்தை இடைநிறுத்தியது. அப்போது தனஞ்சய 155 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இலங்கை அணி இரண்டாவது இனிங்ஸுக்காக 121.4 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 345 ஓட்டங்களை குவித்திருந்தது.

மேற்கிந்தியத் தீவுகளின் வெற்றிக்கு 297 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்ட நிலையில், மேற்கிந்தியத் தீவுகள் அணி இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடியது.



பிராத் வெயிட் 6 ஓட்டங்களுடன் ரமேஷ் மெண்டிஸால் வீழ்த்தப்பட்டார். உணவு இடைவேளை வரை மேற்கிந்தியத் தீவுகள் சிறப்பாக இலங்கை அணியின் பந்துவீச்சாளர்களை எதிர்கொண்டது. மதிய உணவுக்காக ஆட்டம் இடைநிறுத்தப்பட்டபோது 30.4 ஓவர்களில் 2 விக்கெட் இழப்புக்கு 65 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ஆட்டம் தொடங்கிய 13 ஓவர்களின் பின்னர் மேற்கிந்தியத் தீவுகளின் 8 விக்கெட்களும் மளமளவென சாய்க்கப்பட்டன.

ஷாய் ஹோப்பின் மோசமான ஆட்டமிழப்பு தொடர்ச்சியாக விக்கெட் இழப்புக்கு வழிவகுத்தது. ரமேஷ் மெண்டிஸின் 43ஆவது ஓவரின் முதல் பந்தில் அவர் 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ரோஸ்ரன் சேஷ் முதல் பந்திலேயே ஓட்டம் எதுவும் எடுக்காமல் வீழ்ந்தார். அவரைத் தொடர்ந்து வந்த கைல் மேயர்ஸ் தடுப்பாட்டம் ஆட முயன்றார். ஆனால், அவராலும் நிலைக்க முடியவில்லை. அந்த ஓவரின் இறுதிப் பந்தில் ஓட்டம் எதையும் எடுக்காமலே அவர் வீழ்ந்தார்.

லசித் எம்புல்தெனியவின் பந்தில் பின்வரிசை வீரர்கள் வீழ்த்தப்படவே, வீராசாமி பெருமாளை 5ஆவது விக்கெட்டாக ஆட்டமிழக்க செய்தார் ரமேஷ் மெண்டிஸ். லசித் எம்புல்தெனிய இறுதி விக்கட்டா வரிக்கனை 3 ஓட்டங்களுடன் வீழ்த்தவே, அது அவரின் ஐந்தாவது விக்கெட்டாக அமைந்தது.

56.1 ஓவர்களே தாக்குப்பிடித்த மேற்கிந்தியத் தீவுகள் அணி 132 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. பொன்னர் 44, பிளக்வூட் 36 ஆகியோர் பெற்ற ஓட்டங்களே அந்த அணியின் அதிகூடிய ஓட்டங்களாகின.

இறுதியில் இலங்கை அணி 164 ஓட்டங்களால் போட்டியை வெற்றி கொண்டது. இதனால், இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் 2-0 என்ற கணக்கில் முழுமையாக இலங்கை வசமானது.

இந்தத் தொடரில் 17 விக்கெட்களை வீழ்த்திய ரமேஷ் மெண்டிஸ் தொடர் நாயகனாகவும், ஆட்டமிழக்காமல் 155 ஓட்டங்களை குவித்த தனஞ்சய டீ சில்வா ஆட்டநாயகனாகவும் தெரிவாகினர். (ஐ)

# இந்தியா - நியூசி. டெஸ்ட்; 132ஆண்டின் பின் சாதனை!

மும்பை, டிசெ. 04

மும்பையில் நடந்துவரும் இந்தியா, நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டியில் இரு அணிகளும் சேர்ந்து புதிய சாதனையை 132 ஆண்டுகளுக்குப் பின் படைத்துள்ளன.

கான்பூர் டெஸ்ட் போட்டி தோல்வியின் பின்னர் இரு அணிகளிலும் இந்தப் போட்டியில் தலைமை மாற்றங்கள் நிகழ்ந்தன.

கான்பூர் டெஸ்ட் போட்டியில் இந்திய அணிக்கு ரஹானே தலைமை தாங்கினார். மும்பை போட்டிக்கு வழக்கமான தலைவராக விராட் கோலி தலைமை தாங்குகிறார்.

இதேபோன்று கான்பூர் டெஸ்டில் நியூசிலாந்து டெஸ்ட் அணியின் வழக்கமான தலைவரான வில்லியம்சன் தலைமை தாங்கினார். ஆனால், அவருக்கு ஏற்பட்ட காயம் காரணமாக மும்பை போட்டியில் பங்கேற்கவில்லை. அவருக்கு பதிலாக மும்பை போட்டியில் ரொம் லதம் தலைமை பொறுப்பை ஏற்றுள்ளார்.

ஆக, இரு டெஸ்ட் போட்டிகளுக்கு இரு அணிகளிலும் 4 தலைவர்கள் தமது அணிகளை வழிநடத்தியுள்ளனர். இவ்வாறு நடப்பது கிரிக்கெட்டில் மிக அபூர்வமாகும்.

இதற்கு முன் 1889ஆம் ஆண்டு தென்னாபிரிக்கா - இங்கிலாந்து தொடரில் இதேபோன்ற சம்பவம் இடம்பெற்றது. தென்னாபிரிக்க அணிக்கு ஓவன் டன்னல் மற்றும் வில்லியம் மில்டன் என இரு தலைவர்களும், இங்கிலாந்து அணிக்கு அப்ரே ஸ்மித், மன்டி பௌடன் என இருவருமாக 4 அணிகளின் தலைவர்கள் அணிகளை வழிநடத்தினர். இப்போது, ஏறக்குறைய 132 ஆண்டுகளுக்குப் பின் அதே சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது. (ஐ)



# வேலைவாய்ப்பு

கிளீனிங், தொழிலாளர் (Labour), விற்பனையாளர், அற்டன்டன், டெக்னீசியன், ( Ac, வயறிங்), பக்கிங், வெயிட்டர், உதவியாளர், சமையல், தொழிற்சாலை வேலைகள் ஆகியவற்றுக்கு ஆட்கள் தேவை.

தொடர்புகளுக்கு: **077 773 3368**


# மரண அறிவித்தல்

**மலர்வு** 06 - 09 - 1946



**உதிர்வு** 01 - 12 - 2021

## ஜோர்ஜ் மனுவேற்பிள்ளை

(இளைப்பாறிய யாழ்.பொலிஸ் திணைக்கள உத்தியோக அலுவலர்)

ஊர்காவற்றுறை, நாரந்தனை தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டு தற்போது கனடாவில் வாழ்ந்தவரான ஜோர்ஜ் மனுவேற்பிள்ளை அவர்கள் 01.12.2021 புதனன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி மனுவேற்பிள்ளை - றோசலீன் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி சைமன் - றெஜினா தம்பதியரின் அன்பு மருமகனும் மேசி லூட்ஸ் (கனடா) அவர்களின் அன்புக் கணவரும் கனடாவில் வதியும் லூட் வதனா, நிக்சன், நிறஞ்சன், யூட் நிர்மலன் ஆகியோரின் அன்புத் தந்தையும் கனடாவில் வதியும் சுரேந்திரன்(நிறாஜ்), யூட் நிமலேந்திரன் (நிமால்) ஆகியோரின் அன்புத் தாய் மாமனாரும் ஜோதி, மிருணாளினி, கொட்வின். துஷியந்தா, சிறானி, வினிதா, ஆன் சுவாசினி ஆகியோரின் அன் பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான விக்டர், லூயிஸ், ஸ்ரீபன் (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்), திருமதி மேரி கிளாறா அல்பிறட் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான றீற்றா லூயிஸ், அல்பிரட் யோசப், ஹரியற் ஸ்ரீபன் மற்றும் லூசியா ஜோசேபின், மேரி மெக்டலின், காலஞ்சென்றவர்களான அலெக்சாண்டர் பசில், அஞ்சலா(இராஜேஸ்) மற்றும் பீற்றர்போல் ஆகியோரின் அன்பு மைத் துனரும் ஷெரீனா, சியானா, றியானா, நிதுஷன், நிஷாதனா, றெனோஜன், நிலக்ஷன், ஜெலினா, றாயன்,லெறோன், றியோன், ஜொயானா, றெனோன், லெவினா, கசில்டன், அஞ்சனா ஆகியோரின் அன்புப் பேரனும் றுபினா, மறீனா, அலன்பீன், றொபின்ஜீன், சோபனா பிறேமினி, அன்ரன் றவிறாஜ் காலஞ்சென்ற அமலறூபன் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவுமாவார்.

*பார்வைக்கு*
Sunday, 05 Dec 2021 6:00 PM - 9:00 PM
Monday, 06 Dec 2021 8:00 AM - 9:30 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

*திருப்பலி*
Monday, 06 Dec 2021 10:00 AM
St. Thomas the Apostle Roman Catholic Church 14 Highgate Drive, Markham, ON L3R 3R6, Canada

*நல்லடக்கம்*
Monday, 06 Dec 2021 11:30 AM
Christ the King Catholic Cemetery 7770 Steeles Ave E, Markham, ON L6B 1A8, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தொடர்புகளுக்கு:
**சுரேந்திரன் (நிறாஜ்):** 0016475319892
**யூட் நிமலேந்திரன்(நிமால்):** 0016472753752
**லூட் வதனா:** 0016476578318
**நிக்சன்:** 0016475059270
**நிறஞ்சன்:** 0013065415039
**யூட் நிர்மலன்:** 0016476282332
**பீற்றர்போல்:** 0016475627817

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

# ஐ.நா. விசேட அறிக்கையாளரிடம் மலையக அரசியல் அரங்கம் மனு

*கொழும்பு, டிசெ. 04*

மலையகப் பெருந்தோட்ட மக்கள் கடந்த இருநூறு ஆண்டு காலமாக காணி, வீடு, கல்வி, சுகாதாரம் முதலான அடிப்படை உரிமைகளை அனுபவிப்பதில் இருந்து திட்டமிட்ட அடிப்படையில் புறக்கணிக்கப் படுவதாகவும் ஏனைய சமூகங்களில் இருந்து பாரபட்சமான முறையில் நடாத்தப்படுவதாகவும் எடுத்துக் கூறி, இது அரை அடிமைத்தனத்துக்கு ஒப்பானது என்றும் இந்த விடயத்தை ஐக்கிய நாடுகள் சபையின் கவனத்துக்கு கொண்டு வருதல் வேண்டும் எனவும் தமது எழுத்து மூல கோரிக்கையை அடிமைத்தனத்துக்கு எதிரான ஐ.நா. விஷேட அறிக்கையாளரான டொமொயா ஒபோகாட்டா விடம் கையளித்துள்ளதாக மலையக அரசியல் அரங்கம் அறிவித்து உள்ளது.

கடந்த ஒரு வாரகாலமாக இலங்கையில் தங்கி இருந்த அடிமைத்தனத்துக்கு எதிரான ஐ.நா. விஷேட அறிக்கையாளர் டொமொயா ஒபகாட்டோ தமது பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று ஐ. நா .கொழும்பு வளாகத்தில் ஊடக சந்திப்பை நடத்தினார். இதன் போதே மலையக அரசியல் அரங்கத்தின் செயலாளர் நா.கிருஷ்ணகுமார் தமது அமைப்பின் சார்பான கோரிக்கை மனுவை கையளித்துள்ளார்.

இது குறித்து அவர் தெரிவித்து உள்ளதாவது.

ஏதேனும் வடிவத்தில் அடிமைகள் போன்று நடத்தப்படும் மக்கள் சமுதாயத்தினர் இலங்கையில் இருப்பார்களாயின் அவர்கள் குறித்த விபரங்களை பெற்று ஐக்கிய நாடுகள் சபைக்கு அறிக்கையிடும் பணியினை மேற்கொள்ளவே விஷேட அறிக்கையாளர் டொமொயா ஒபகாட்டோ இலங்கை வருகை தந்து இருந்தார். இலங்கையில் மலையகப் பெருந்தோட்டத் துறையில் தொழிலாளர்களாக கடந்த இருநூற்றாண்டு காலமாக நாட்கூலி முறையிலே வைக்கப்பட்டுள்ள சமுதாயத்தினர் காணி உரிமை மறுக்கப்பட்டவர்களாக உரிய வீட்டு வசதி வாய்ப்புகள், சுத்தமான குடிநீர் சுகாதார வசதிகள் மறுக்கப்படவர்களாக கல்வியி லும் பாரபட்சம் காட்டப்பட்டவர்களாக வைக்கப்பட்டுள்ளனர் என்பதனையும், நாட்டின் பொருளாதாரத்துக்கு பங்களிப்பு பெருமளவில் பங்களிப்பு செய்த மோதும் கூட இன்னும் இலங் கையில் அதிக வறுமை மட்டத்தில் வாழ்பவர்களாகவும் அவர்களே உள்ளனர் போன்ற விடயங்களையும் சுட்டிக்காட்டி, இதனால் குடும்ப வறுமை , சிறுவர் தொழில், பெண்கள் உரிமை பாதிப்பு, இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பு இல்லாமை போன்ற மாறுபட்ட பிரச்னைகள் தோன்றி சிறுவர் - பெண்கள் துஷ்பிரயோகம் மரணம் முதலான இன்னல்களுக்கு தோட்டத் தொழிலாளர் சமூகம் தள்ளப்படுவதாகவும் எமது எழுத்து மூல ஆவணத்தில் பதிவு செய்து விஷேட அறிக்கையாளரிடம் கையளித்தோம்.

# நாம் எந்த தேர்தலுக்கும் பயந்தவர்கள் அல்ல

## அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன

*கொழும்பு, டிசெ. 04*

நாம் எந்த தேர்தலுக்கும் பயந்தவர்கள் அல்ல.மாகாண சபைத் தேர்தல் நடத்துவோம். அதில் வரலாற்று வெற்றி பெறுவோம் என அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பாதுகாப்பு அமைச்சு ,பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு ,அரச பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு, உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு, சமூக பொலிஸ் சேவைகள் இராஜாங்க அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் ,

நல்லாட்சி அரசு என்ற பெயரில் செய்ய வேண்டிய அத்தனை துரோகத் தனத்தையும் செய்து விட்டு இப்போது நாமே உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குக் காரணமானவர்கள் என எதிர்க் கட்சி அரசாங்கத்தின் மீது கை நீட்டுவது விந்தையாக உள்ளது.அரசாங்கம் எதையும் எந்த சந்தர்ப்பத்திலும் மறைக்கப் போவதில்லை. இவர்கள் நேர்மையானவர்கள் என்றால் 2019 தேர்தலில் வெற்றி பெற்றிருக்க முடியுமே?

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் சம்பந்தப்பட்டவர்களுக்கு தண்டனை பெற்றுக் கொடுப்பதாக கூறினார்கள்.ஏன் அதனை செய்யவில்லை? அந்த தாக்குதலுக்கு முன்பும் அதன் பின்னரும் பல இடங்களில் தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளதுடன் காத்தான்குடி நுவரெலியா போன்ற பகுதிகளில் அதனுடன் சம்பந்தப்பட்ட பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டனர். அவை தொடர்பான அனைத்து தகவல்களும் கிடைக்கப் பெற்றிருந்த போதும் அந்த அரசாங்கம் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கவில்லை.

தாக்குதல் தொடர்பில் அமைச்சர் ஒருவரின் தந்தை தமது மகனுக்கு தகவல் வழங்கி இருந்தும் அவர் தம்மை பாதுகாத்துக் கொண்டாரே தவிர அந்த தாக்குதலை தடுக்க செய்யப்படவில்லை.அதனால் பல அப்பாவி உயிர்களே இல்லாமல் போனது.இன்று அந்தத் தாக்குதல் தொடர்பில் வெட்கம் இல்லாமல் எம் மீது குற்றம் சுமத்தி வருகின்றனர்.

நான்கு ஜனாதிபதிகளால் முடியாது போன பயங்கரவாத யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்தவர் எமது தலைவர் மஹிந்த ராஜபக்ஷ. அவர் சிறந்த ஆளுமை உள்ளவர். எதிர்க் கட்சி தலைவர் என்பவர் எந்த ஆளுமையும் இல்லாதவர். கடந்த தேர்தலில் மட்டுமன்றி எதிர்வரும் தேர்தலில் அவர் கள் வெல்லப் போவதில்லை.

கடந்த தேர்தலில் வெற்றி பெற்று பாதுகாப்பு அமைச்சர் பதவிக்காக கனவு கண்டு கொண்டிருந்தவர் சரத் பொன்சேகா. சஜித் வழங்கிய உறுதிமொழியை வைத்துக்கொண்டு அவர் ஏமாந்துவிட்டார்.

தற்போது மாகாணசபை தேர்தல்கள் பற்றி பேசுகின்றனர். அவர்களது காலத்தில் மாகாணசபை தேர்தலை நடத்த திராணி இல்லாதவர்கள் இப்போது அது பற்றி பேசுகின்றனர். நாம் எந்த தேர்தலுக்கும் பயந்தவர்கள் அல்ல.மாகாண சபைத் தேர்தல் நடத்துவோம். அதில் வரலாற்று வெற்றி பெறுவோம் - என்றார் .




## வாக்கெடுப்பை...

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை, பாதுகாப்பு அமைச்சு, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு, அரச பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சுக்கள் மீதான விவாதம் இடம்பெற்றவேளையில், தமிழ் மக்களின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் சபையில் அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்து உரையாற்றியிருந்தனர்.

இனப்படுகொலை விவகாரங்கள், வடக்கு-கிழக்கின் நில ஆக்கிரமிப்பு மற்றும் இராணுவ ஆக்கிரமிப்பு உள்ளிட்ட விடயங்களை சபையில் முன்வைத்த வேளை அதற்கு ஆளுந்தரப்பு அமைச்சர்கள் மற்றும் பின்வரிசை உறுப்பினர்கள் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியதுடன் விமர்சனத்தையும் முன்வைத்தனர்.

இந்நிலையில் பிற்பகல் வேளையில் அமைச்சின் சகல விவாதங்களும் நிறைவுக்கு கொண்டுவரப்பட்டு நிதி ஒதுக்கீட்டை நிறைவேற்ற அரசாங்கம் தயாராக இருந்தவேளையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பாதுகாப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீடுகள் மீது வாக்கெடுப்பு நடத்தக் கோரிக்கை விடுத்தார்.

எனினும் இதற்கு ஆளும்கட்சியும், சபாநாயகரும் இணக்கம் தெரிவிக்கவில்லை. பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அமைச்சின் மீதான வாக்கெடுப்பை கேட்க 24 மணிநேரத்துக்கு முன்னர் அதனை சபைக்கு அறிவிக்கவேண்டும். ஆனால் நீங்கள் அறிவிக்கவில்லை. எனவே இதனை கருத்தில் கொள்ள முடியாது. ஆனால் உங்களின் எதிர்ப்பை பதிவு செய்துகொள்கின்றோம் என சபாநாயகர் தெரிவித்தார்.

எனினும் இதற்கு இணக்கம் தெரிவிக்காத கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. , தான் இது குறித்து ஏற்கனவே எதிர்க்கட்சி பிரதம கொரடாவுக்கு அறிவித்துள்ளதாகவும், ஆனால் அவர்கள் அறிவிக்காதது எனது தவறு அல்ல என்றும் சுட்டிக்காட்டியதுடன், தனது பாராளுமன்ற சிறப்புரிமையை பறிக்கும் செயலாக இது அமைந்துள்ளது-என்றார்.

இதன்போது ஒழுங்குப்பிரச்னை எழுப்பிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எ.சுமந்திரன், கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எவ்வாறான இணக்கத்துக்கு வந்தாலும் கூட, பாராளுமன்றத்தில் ஒரு உறுப்பினர் தனது சிறப்புரிமையை பயன்படுத்தி வாக்கெடுப்பை கேட்கும்வேளையில் அதனை எக்காரணம் கொண்டும் நிராகரிக்க முடியாது. வாக்கெடுப்பு கேட்கும்வேளையில் அதற்கு அனுமதிக்க வேண்டும். அதனை நிராகரிப்பது தவறானது-என்றார்.

இதன்போது ஒழுங்குப்பிரச்னை எழுப்பிய சபை முதல்வர் தினேஷ் குணவர்தன, கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும், பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய கூட்டத்திலும் இவர்கள் உள்ளனர். இதன்போது நாம் வாக்கெடுப்பை கேட்பதில்லை என நீண்ட நேர கலந்துரையாடலின் பின்னர் இணங்கியுள்ளோம். ஆகவே அதனை இப்போது மீறமுடியாது-என்றார்.

அதே நிலைப்பாட்டில் இருந்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவும் தாம் வாக்கெடுப்பை வழங்க முடியாது. கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுத்த தீர்மானமே நடைமுறைப்படுத்தப்படும், எனவே இதுவே எனது இறுதி முடிவும் என கூறி தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமையை நிராகரித்தார்.

இதன்போது விசனமடைந்த இரு கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் தமக்கான சிறப்புரிமை இவ்வாறு ஆளுந்தரப்பின் தன்னிச்சையான செயற்பாடுகள் காரணமாக நிராகரிக்கப்படும் காரணத்தினால் தாம் சபையை விட்டு வெளிநடப்பு செய்வதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் எம்.பி. சுமந்திரன் சபைக்கு அறிவித்தார்.

அதற்கமைய சபையில் இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் மற்றும் கஜேந்திரகுமார் எம்.பி, கஜேந்திரன் எம்.பி. ஆகியோர் சபையை விட்டு வெளியேறிச் சென்றனர். (அ)

## நாடு முழுவதும்...

டுக்கு முகம்கொடுக்க நேரிடும் என்று இலங்கை மின்சார சபை பொறியியலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையம் அதன் முழு மின் விநியோகத் திறனைப் பெறுவதற்கு 3 நாள்கள் வரை ஆகும் என்று இலங்கை மின்சார சபை பொறியியலாளர்கள் சங்கத்தின் செயலாளர் தம்மிக விமலரத்ன தெரிவித்தார்.

“நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் சிக்கலைச் சரி செய்வதில் கடினமான நேரத்தை எதிர்கொண்டுள்ளோம். இப்போது நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையம் தடைப்பட்டுள்ளதால் நாடு முழுவதும் உடனடியாக மின் உற்பத்தி நிலையங்களுக்கு ஏற்பட்டுள்ள அழுத்தத்தின் காரணமாக சுமைகளை அகற்றுவதற்கு நாங்கள் தீர்மானித்துள்ளோம்.

எனவே, அடுத்த 3-4 நாள்களுக்கு, இலங்கையில் உள்ள பகுதிகளில் சுமையை சமப்படுத்த ஒன்றரை மணிநேரம் மின் வெட்டை நடைமுறைப்படுத்த நாங்கள் முடிவு செய்துள்ளோம் ”என்றும் அவர் கூறினார்.

மின்சாரத் தடையினால் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியத்தை கருத்தில் கொண்டு, வேலைநிறுத்தப் போராட்டத்தை, இலங்கை மின்சார சபை பொறியியலாளர்கள் தற்காலிகமாக மீளப் பெற்றுள்ளதாக விமலரத்ன மேலும் தெரிவித்தார். (அ)

## 11 மாணவர்...

பாதுகாப்பு அமைச்சு, அரச பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு, உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு,சமூக பொலிஸ் சேவைகள் இராஜாங்க அமைச்சு ஆகியவற்றுக்கான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் எனக்கு பாதுகாப்பு அமைச்சை தருவதாகவும், அதன் மூலமாக இந்த செயற்பாடுகளை முழுமையாக இல்லாதொழிக்க எனக்கு முழுமையான அதிகாரத்தை வழங்குவதாகவும் எமது தலைவர் எனக்கு வாக்குறுதியளித்துள்ளார். ஆகவே எமது அரசாங்கம் கண்டிப்பாக ஆட்சியமைக்கும், குற்றவாளிகள் எந்தப்பக்கம் இருந்தாலும் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பேன்.

இதேவேளை முன்னாள் கடற்படை தளபதியான கரன்னாகொட 11 மாணவர்களை கைது செய்து, கப்பம் கேட்டு கொலை செய்துள்ளார். அதில் சிங்கள, முஸ்லிம் மாணவர்களும் இருந்துள்ளனர். அவர்கள் பாடசாலைகளுக்கு செல்பவர்கள். இவர்களை கடலில் போட்டுள்ளதாக சாட்சிகளில் உறுதியாகியுள்ளது. இவ்வாறானவர்களை பாதுகாக்க வேண்டாம்.

எமது அரசாங்கம் வந்த பின்னர் நிச்சயமாக இந்த பிரச்சனையை மேலே எடுப்போம். கரன்னாகொடவுக்கு எதிராக இந்த சம்பவம் தொடர்பில் நடவடிக்கை எடுப்போம் என்றார்.

## வடக்கில்...

துங்குவதற்கு காரணம் என்ன? இவ்வாறு சடலங்கள் கரையொதுங்குவதற்கு பொறுப்புக்கூறுவது யார்? என தமிழ் தேசியக்கூட்டமைப்பின் யாழ் மாவட்ட எம்.பி. யான எஸ். ஸ்ரீதரன் கேள்வி எழுப்பினார்

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பாதுகாப்பு அமைச்சு, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு, அரச பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு, உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு,சமூக பொலிஸ் சேவைகள் இராஜாங்க அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

## டெங்கு...

ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில், டெங்கு தொற்று தீவிரமடைவதை கட்டுப்படுத்தும் நோக்குடன் நாளை மறுதினம் 6ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நுளம்புக் கட்டுப்பாட்டு வாரமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையால் டெங்கு நோய் மூலம் அதிக இறப்புக்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே டெங்கிலிருந்து எமக்கு நெருக்கமானவர்களையும் எமது சமூகத்தையும் பாதுகாப்பதற்கு எமது வீடுகள், வேலைத் தளங்கள், வழிபாட்டுத்தலங்கள், பாடசாலைகள், மற்றும் பொது இடங்களில் நீர் தேங்கி நுளம்புப் பெருக்கம் ஏற்படாதவாறு பராமரிப்பது எம் அனைவரினதும் முக்கிய பொறுப்பாகும்- என்றும் அவர் தெரிவித்தார். (அ-03)

## பூஸ்டர் தடுப்பூசி...

டுக்கப்படும் போதும் மக்கள் ஆர்வம் காட்டவில்லை என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

எனவே கோவிட்-19 நோய்த்தொற்றிலிருந்து பாதுகாப்பாக இருக்கு மேற்குறிப்பிட்ட அனைவரும் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

இது தொடர்பில் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

கோவிட் - 19 தடுப்பூசி வழங்கல் திட்டத்தின் கீழ் நோயெதிர்ப்பு சக்தி குறைந்தவர்களுக்கும் அதிக ஆபத்துள்ள நோய் நிலைமையுடைய 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் மேலதிகமாக மூன்றாவது தடவையாக (பூஸ்டர்) கோவிட்-19 தடுப்பூசியானது நவம்பர் 22ஆம் திகதி முதலும் மற்றும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு நவம்பர் 29ஆம் திகதி முதலும் வழங்கப்பட்டு வருகின்றன.

எனினும் வருந்தத்தக்க வகையில் இந்த மேலதிக தடுப்பூசியை பெற்றுக்கொள்வதில் மக்களிடையே ஆர்வம் குறைவாகவே காணப்படுகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

வடக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள இறப்புக்களை ஆராயும்போது வயது முதிர்ந்தவர்கள் மற்றும் நோயெதிர்ப்பு சக்தி குறைந்தவர்களின் எண்ணிக்கையே அதிகமாக காணப்படுகின்றது.

தடுப்பூசி ஏற்றிக்கொள்வதன் மூலம் மட்டுமே கோவிட்-19 தொற்று ஏற்பட்டாலும் அதன் தாக்கத்தையும் அதன் மூலம் ஏற்படும் இறப்புக்களையும் குறைக்கக்கூடியதாக இருக்கும்.

நோயெதிர்ப்பு சக்தி குறைந்தவர்கள் மற்றும் அதிக ஆபத்துள்ள நோய் நிலமையுடைய 20 வயதுக்கு மேற்பட்டவர்கள் இரண்டாவது தடுப்பூசியைப் பெற்று ஆகக்குறைந்தது ஒரு மாத இடைவெளியின் பின்னரும் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் மூன்று மாத இடைவெளியின் பின்னரும் இத் தடுப்பூசியை பெற்றுக் கொள்ளலாம்.

எனவே மேற்குறிப்பிட்டவர்களில் சினோபார்ம் கோவிட்-19 தடுப்பூசியை இரண்டு தடவைகள் பெற்றுக்கொண்டவர்கள் மட்டுமே தமது தடுப்பூசி அட்டையினை சமர்ப்பித்து தமக்குரிய மூன்றாவது தடுப்பூசியை (பூஸ்டர்) பெற்றுக்கொள்ள முடியும்.

அவ்வகையில் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் அந்தந்த பிரதேசங்களுக்குரிய சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைகளிலும், நோயெதிர்ப்பு சக்தி குறைந்தவர்களுக்கும் அதிக ஆபத்துள்ள நோய் நிலமையுடைய 20 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கும் மற்றும் தடுப்பூசி அல்லது வேறுமருந்துகளிற்கு ஒவ்வாமை உடையவர்களுக்கும் இன்று சனிக்கிழமை மற்றும் டிசெம்பர் 11 ஆம் திகதி சனிக்கிழமைகளில் தடுப்பூசி வழங்குவதற்கு யாழ். மாவட்டத்தில் யாழ் போதனா மருத்துவமனை மற்றும் பருத்தித்துறை, ஊர்காவற்றுறை, தெல்லிப்பழை, சாவகச்சேரி ஆதார மருத்துவமனைகளிலும், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள மாவட்ட பொது மருத்துவமனைகளிலும் இத்தடுப்பூசிகள் வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

60 வயதிற்கு மேற்பட்டவர்களில் அவ்வாறான நிலைமைகள் இருப்பதாக சந்தேகிக்கப்பட்டு தடுப்பூசி வழங்கப்படாது திருப்பி அனுப்பப்பட்டவர்கள் தடுப்பூசி வழங்கும் நிலையத்தில் உள்ள மருத்துவ அதிகாரியின் பரிந்துரைக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டு மேற்குறிப்பிட்ட மருத்துவமனைகளில் ஏதாவது ஒன்றில் தமக்குரிய மூன்றாவது தடுப்பூசியினை பாதுகாப்பாக பெற்றுக்கொள்ள முடியும் - என்றுள்ளது.

## ரயில் ‘பட்டா’வை...

ருந்தமையால் சமிக்ஞை கட்டமைப்பு செயலிழந்திருந்தபோதே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

இதில், தென்மராட்சி - கொடிகாமம் - தவசிக்குளத்தை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான சூசைநாதன் பிரதீபன் (வயது - 32) என்பவரே உயிரிழந்தார்.

நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் வேளை, தென்மராட்சி பிரதேச செயலகம் முன்பாக உள்ள ரயில் கடவையை பட்டா வாகனம் கடந்தபோதே ரயில் மோதியது. இதில் படுகாயமடைந்த அவர் உடனடியாக சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

எனினும், அவர் அங்கேயே உயிரிழந்தார் என்று தெரிய வருகின்றது. சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

நேற்று நாடாளவிய ரீதியில் நீடித்த மின்தடை காரணமாக சமிக்ஞை கட்டமைப்பு செயலிழந்ததாக அறிவித்திருந்த நேரத்திலேயே இந்த விபத்து இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

## நாடு முழுவதும்...

இந்த மின் தடை, மின் பொறியியலாளர் சங்கத்தின் நாசகார வேலையால் ஏற்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுவதாக மின்சார சபையின் பொது முகாமையாளர் தெரிவித்தார்.

இந்நிலையில், மின்சார பொறியியலாளர்கள் சங்கத்தினர் மின்சார மீள் இணைப்பு பணிகளை வேண்டும் என்றே இழுத்தடிப்புச் செய்தனர் என மின்சார சபை பொது முகாமையாளர் மேலும் கூறினார்.

எனினும், மின்விநியோகம் சீரமைக்கப் பட்டதுடன் 400 மெகா வோட் மின்சாரம் மீள் இணைக்கப்பட்டது.

இதையடுத்து பல பகுதிகளுக்கு நேற்று மாலை 5.30 மணியளவில் மின்விநியோகம் வழமைக்குத் திரும்பியது.

இதேவேளை, மின் உற்பத்தி நிலையங்களில் சேவையாற்றும் பொறியியலாளர்களின் சட்டப்படி வேலை செய்யும் தொழிற்சங்க நடவடிக்கை நேற்றுப் பிற்பகல் தற்காலிகமாகக் கைவிடப்பட்டது. (இ)

## மின்சார...

பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

நாடு முழுவதும் நேற்று பிற்பகல் மின் தடை ஏற்பட்டிருந்தது. முதலில் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இந்த மின் விநியோகத் தடை ஏற்பட்டிருப்பதாக மின்சார சபை அறிவித்தது.

எவ்வாறாயினும், பின்னர் இது தொழிற்சங்கங்களின் சதியாக இருக்கலாம் என்ற சந்தேகம் எழுவதாக இலங்கை மின்சார சபை தலைவர் தெரிவித்திருந்தார்.

எவ்வாறாயினும், இந்த சம்பவத்தின் உண்மைத் தன்மையை அறிந்துகொள்ளும் நோக்கில் தற்போது குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

ஈழநாடு
Eelanadu

# எலும்பும் தோலுமான மாகாண சபை வரும்

## புதிய அரசமைப்பு தொடர்பில் ஈ. பி. ஆர். எல். எப். சந்தேகம்

கொழும்பு, டிசெ. 04

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசு கொண்டு வரவுள்ள புதிய அரசமைப்பு தொடர்பில் ஈ.பி. ஆர். எல். எவ். அமைப்பின் தலைவரும் முன்னாள் யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிறேமச்சந்திரன் சில சந்தேகங்களை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"புதிய அரசமைப்பு எதற்கு என்ற கேள்வி ஆரம்பத்தில் இருந்து இருக் கின்றது. புதிய அரசமைப்பு என்ன புதிய விடயங்களைக் கொண்டு வரப் போகின்றது என்ற கேள்வியும் எல் லோர் மத்தியிலும் இருக்கின்றது.

ஏற்கனவே இருக்கின்ற அரச மைப்பில் 20ஆவது திருத்தச் சட் டம் என்பது ஜனாதிபதிக்கு மேலதிகமான அதிகாரங்களைக் கொடுத் துள்ளது. ஆகவே, ஜனாதிபதி தனக்கான அதிகாரங்களை ஏற்க னவே கையில் எடுத்துள்ளார்.

தேர்தல் முறைமை தொடர்பில் ஒரு பிரச்னை இருக் கின்றது. இனி மேல் நடைபெறவுள்ள தேர்தல்களை விகிதாசார முறைமையிலா அல்லது கலப்பு முறைமையிலா நடத்துவது என்ற கேள்வி இருக்கின்றது.

இந்தத் தேர்தல் தொடர்பான மாற்றத்தை தற்போதைய அரச மைப்பின் இன்னொரு திருத்தத்தின் ஊடாகக் கொண்டுவரப்பட்டு அது முடிவுக்குக் கொண்டுவரப் படலாம்.

ஆனால், இதற்கு மாறாக புதிய அரசமைப்பு பற்றி இப் போது பேசப்படுகின்றது.

இந்தப் புதிய அரசமைப்பின் ஊடாக இது ஒரு பௌத்த நாடாக அல்லது இது ஒரு பௌத்த அரசியல் சாசனமாக மாற்றுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்படலாம். ஏனெனில் புதிய அரசமைப்பின் வரைவு இதுவரை பாராளுமன்றத்திலோ அல்லது வெளியிலோ முன்வைக்கப்படவில்லை. அந்த வரைவைப் பார்ப்பதற்கான சாத்தியப் பாடுகள் எதுவும் யாருக்கும் கிடைக்கவில்லை.

சிங்கள - பௌத்த வாக்குக ளால்தான் இந்த ஆட்சியை அமைத்துள்ளதாக ஜனாதிபதி தலைமையிலான அரச தரப்பினர் கூறுகின்றனர். சிங்கள மக்கள்தான் தமக்கு முழுமையாக வாக்களித்துள்ளனர் எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான சூழ்நிலையில் புதிய அரசியல் சாசனம் என்பது தமிழ் மக்களுடைய அல்லது ஏனைய சிறுபான்மை இனங்க ளுடைய அபிலாசைகளை உள்ளடக்கி இருப்பதற்கான வாய்ப்புக்கள் மிக மிகக் குறைவு.

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டமே தேவை இல்லை என்று கூறக்கூடிய அரசுதான் இப்போது இருக் கின்ற அரசு. 13ஆவது திருத்தச் சட்டம் தேவையில்லை, இலங்கைத் தமிழ் மக்களுக்கு இனப்பிரச்னை என்ற ஒன்று கிடையாது, சில பொருளாதாரப் பிரச்னைகள் மாத்திரம் தான் இருக்கின்றன, அவற்றைத் தீர்த்துவிட்டால் போதும் என்று சொல்லக்கூடியவர்தான் இப்போது இருக்கின்ற ஜனாதிபதி.

இலங்கையின் இப்போதைய ஜனாதிபதியையும், அரச தரப்பி னரையும் பொறுத்த வரைக்கும் இது சிங்கள - பௌத்த நாடாக இருக்க வேண்டும் என்பதில் தெளிவாக இருக்கின்றனர். முழு இலங்கையும் சிங்கள - பௌத்த மேலாதிக்கத்துக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் என்பதிலும் அவர் கள் தெளிவாக இருக் கின்றனர்.

எனவே, வரப்போகின்ற புதிய அரசமைப்பு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட 13ஆவது திருத்தச் சட் டத்தையும் இல்லாமல் செய்கின்ற அரசியல் சாசனமா அல்லது 13ஆவது திருத்தத்தில் உள்ளவற்றில் சிலவற்றை எடுத்து விடுவதற்கான அரசியல் சாசனமா? போன்ற கேள்விகள் எழுந்துள்ளன.

13ஆவது திருத்தச் சட்டத்திலுள்ள மாகாண சபை அதிகாரங் களை மத்திய அரசு கையகப்ப டுத்தும் கைங்கரியங்களில் தற்போது ஈடுபட்டு வருகின்றது. - என் றார்.

(இ)




## மரண அறிவித்தல்



மலர்வு 05 - 07 - 1934

உதிர்வு 27 - 11 - 2021

### மாப்பாணர் துரைராஜா

Retired Police Officer

யாழ். மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், லண்டன் Hainault ஐ வசிப்பிடமாகவும் கொண்ட மாப்பாணர் துரைராஜா அவர்கள் 27.11.2021 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.ஷ

அன்னார் காலஞ்சென்ற மாப்பாணர் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், சிவபாக்கியம் - கந்தையா தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயராணி அவர்களின் அன்புக் கணவரும், குகன், குமணன், வாசுகி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுகன்யா, லஷ்மி, திருக்குமரன் ஆகியோரின் அன்பு மாமனாரும்,சேயோன், அனிஷ், கோபிதன், பிரவீன், சஞ்சிதன் ஆகியோரின் பாசமிகு பேரனும்,காலஞ்சென்றவர்களான செல்வராஜா, ஞானமணி, இராசமணி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ் சென்றவர்களான சரஸ்வதி, ஆலாலசுந்தரம், கந்தையா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

*பார்வைக்கு*
Friday, 03 Dec 2021 3:00 PM - 5:00 PM
Saturday, 04 Dec 2021 9:00 AM - 12:00 PM
Angel Funeral Directors 267 Allenby Rd, Southall UB1 2HB, United Kingdom

*கிரியை*
Sunday, 05 Dec 2021 1:00 PM - 3:00 PM
Kenton Scout Centre 387 Kenton Rd, Harrow HA3 0YG, United Kingdom

*தகனம்*
Sunday, 05 Dec 2021 4:00 PM
Hendon Cemetery & Crematorium Holders Hill Rd, London NW7 1NB, UK

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**குகன் (மகன்)** : +447930344183
**குமணன் (மகன்)** : +4542347339
**வாசுகி (மகள்)** : +447466633401
**திருக்குமரன் (மருமகன்)** : +447960484959

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



மலர்வு 30 - 01 - 1935

உதிர்வு 02 - 12 - 2021

### திருமதி தவமணி கபிரியேல்பிள்ளை (மணி)

**(இளைப்பாறிய ஆசிரியை)**

யாழ். உடுவில் சங்குவேலியைப் பிறப்பிடமாகவும், சில்லாலையை வதிவிடமாகவும், கனடா Toronto வை வசிப்பிடமாகவும் கொண்ட தவமணி கபிரியேல்பிள்ளை அவர்கள் கடந்த (02.12.2021) வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மருதப்பு தம்பு ரோஸ் நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும்,பிலிப்பு பிள்ளை கபிரியேல்பிள்ளையின் அன்பு மனைவியும், கௌரி (கனடா), நிமலன்(லண்டன்), காலஞ்சென்ற சுகுணன் ஆகியோரின் அன்புத் தாயாரும், அன்ரன் (கனடா), மேசி(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான ஜெயரட்ணம், எமிலி, சாம், அருள்பிரகாசம், பாக்கியம், ஜேம்ஸ், ஞானம் மற்றும் நேசம்(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும்,ஜெரின், ஜெஸ்டன், ஜெனிசா, அன்ரனிற்ரா, அனிலா, அனிஷா ஆகியோரின் பாசமிகு பேத்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விரம் பின்னர் அறியத்தரப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**கௌரி தேவராஜா - மகள்**
Mobile : +14168993136

*தகவல்:*
**குடும்பத்தினர்.**







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.12.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
*6.00 மணி* : பக்திப்பாடல்கள்
*6.30 மணி* : வணக்கம் டான்



*6.31 மணி* : தினம் ஒரு திருக்குறள்
*6.35 மணி* : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
*6.55 மணி* : இன்றைய பலன்
*7.05 மணி* : உளவியல் கருத்து
*7.15 மணி* : கதைவழி அறமொழி-யோன்சன் ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர் யாழ்ப்பாணம் வலயக்கல்வி
*7.30 மணி* : பத்திரிகைகள் ஒரு பார்வை
*8.30 மணி* : காலை செய்திகள்
*9.00 மணி* : கலாட்டா காலை-நேரலை
*10.30 மணி* : TIK TOK
*11.00 மணி* : அந்தக்காலம் இந்தக்காலம் -மறு ஒளிபரப்பு

**பகல்**
*12.00 மணி* : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
*1.00 மணி* : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி
*1.30 மணி* : WEEK END MOVIE - ஜே.ஜே
*4.30 மணி* : காட்டுன் தமிழ்
*5.00 மணி* : அந்தி மந்தாரை (நேரலை)
*6.00 மணி* : எது சரி? எது பிழை-ஒரே நாடு ஒரே சட்டம்



**இரவு**
*7.00 மணி* : கொழும்பு-16- உங்களுக்கு தெரியாத கொழும்பு
*7.30 மணி*: மனிதனின் மறுபக்கம்




*8.00 மணி* : இரவுச் செய்திகள்
*9.00 மணி*: சொல்லாடுகளம்




*10.00 மணி* : நெற்றிக்கண்

**காலை**
*6.00 மணி* : சிரி சிரி சிரி
*8.00 மணி* : சிரிப்பு சரடிவெடி
*10.00 மணி* : ஒரு பட கொமடி
*11.00 மணி* : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
*1.00 மணி* : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
*3.00 மணி* : குண்டக்க மண்டக்க
*5.00 மணி* : ஒரு பட கொமடி
*6.00 மணி* : கொமடி கலாட்டா

**இரவு**
*8.00 மணி* : ஒரு படக்கொமடி
*9.00 மணி* : சிரிப்போ சிரிப்பு
*10.00 மணி* : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
*6.00 மணி* : பனிப்பூக்கள்
*7.00 மணி* : திசை எட்டும் இசை எட்டும்
*8.00 மணி* : வணக்கம் டான் மியூசிக்
*9.00 மணி* : மெல்லிசை
*10.00 மணி* : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
*12.00 மணி* : ராஜா ராணி
*1.00 மணி* : விசை இசை
*3.00 மணி* : வட்ஸ் அப் (நேரலை)
*4.00 மணி* : டீ டைம் ராகங்கள் (நேரலை)
*5.00 மணி* : இனிது இனிது
*6.00 மணி* : என்றென்றும் இசை
*7.00 மணி* : ஓய்வெடு நிலவே

**இரவு**
*8.00 மணி* : காற்றில் வரும் கீதம்
*9.00 மணி* : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
*5.15 மணி* : தரம் 06 - விஞ்ஞானம்
*6.00 மணி* : தரம் 07 - தமிழ்
*6.45 மணி* : தரம் 08 - தமிழ்
*7.30 மணி* : தரம் 09 - கணிதம்
*8.15 மணி* : தரம் 10 - கணிதம்
*9.00 மணி* : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
*10.00 மணி* : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
*11.00 மணி* : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
*12.00 மணி* : தரம் 06 - விஞ்ஞானம்
*1.00 மணி* : தரம் 07 - தமிழ்
*2.00 மணி* : தரம் 08 - தமிழ்
*3.00 மணி* : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
*3.40 மணி* : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
*4.20 மணி* : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
*5.00 மணி* : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
*5.40 மணி* : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
*6.20 மணி* : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
*7.00 மணி* : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**காலை**
*5.00 மணி* : சிவாய மந்திரம்
*6.00 மணி* : சுப்ரபாதம்
*6.30 மணி* : சுப்ரபாதம்
*07.00 மணி* : இன்றைய சிந்தனை
*07.05 மணி* : இன்றைய நாள்
*07.30 மணி* : மங்கள இசை
*08.00 மணி* : அருளுரை
*08.30 மணி* : திருவாசகம்
*09.00 மணி* : திருவிழா-01
*10.00 மணி* : பாடல்கள்
*10.30 மணி* : பஜனை
*11.00 மணி* : பக்திமலர்

**பகல்**
*12.00 மணி* : திரையில் பக்தி
*12.30 மணி* : திருவிழா-02
*6.00 மணி* : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
*7.00 மணி* :செய்திகள்
*7.30 மணி* : அருளுரை

**காலை**
*7.00 மணி* : நாளொரு நற்சிந்தனை
*7.30 மணி* : அன்பின் மகிழ்வு குடும்பம்
*8.00 மணி* : ஜெபமாலை
*9.30 மணி* : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
*10.00 மணி*: அன்னை மரியா
*10.30மணி* : திருப்பலி (யாழ்ப்பாணம்)
*11.30 மணி* : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
*12.00 மணி* : திருப்பலி (திருகோணமலை)
*01.00 மணி* : திருப்பலி (மட்டக்களப்பு)
*02.00 மணி* : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
*03.00 மணி* : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
*04.00 மணி*: திருப்பலி (மட்டக்களப்பு)
*05.00 மணி* : திருப்பலி (திருகோணமலை)
*06.00 மணி* : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
*07.00 மணி* : ஞானவழி
*07.30 மணி* : அன்பியம்

**காலை**
*6.00 மணி* : கிராத்
*7.00 மணி* : இறை சிந்தனை
*7.30 மணி* : இஸ்லாமிய பாடல்
*8.00 மணி* : கலந்துரையாடல்
*9.00 மணி* : இஸ்லாமிய சீரிஸ்
*10.00 மணி* : மனதோடு பேசலாம்
*10.30 மணி* : கண் வசண்ணம் கை வண்ணம்
*11.00 மணி* : சுவனப்பாதை
*11.30 மணி* : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
*12.00 மணி* : லுகர் அதான்
*12.30 மணி* : இஸ்லாமிய வரலாறு
*1.00 மணி* : இஸ்லாமிய திரைப்படம்
*2.00 மணி* : கஸீதா
*2.30 மணி* : இறை சிந்தனை
*3.00 மணி* : பாடல்கள்
*3.30 மணி* : பள்ளிவாசல் ஆவணப்படம்
*4.00 மணி* : சிறுவர் இஸ்லாமிய கார்டுன்
*5.00 மணி* : இறை தென்றல்
*6.00 மணி* : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
*7.00 மணி* : பிறை பிரசங்கம்
*8.00 மணி* : இஸ்லாமிய வரலாறு